# கவி மலர் மாலை

# கவி மலர் மாலை

மாலை—2

(ஐந்தாம் வகுப்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மாள்,
*Senior Tamil Pandit, Lady Willingdon Training College, Madras*

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

பதிப்பாளர்:
கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
ஜார்ஜ் டவுன், சென்னை
பதிப்புரிமை] 1940 [விலை அணா 5

7200a

**Approved by the Text-Book Committee, Madras**
*as suitable for class use. Vide Fort St. George Gazette, Consolidated List of Approved Books on page 222 dated 2nd May, 1939.*

# முகவுரை

சீரிய அறிவுடையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்கள் சிலவற்றுள் போதனு முறை என்பதும் ஒன்று. தானங்கள் பலவற்றுள்ளும் கல்வி தானமே தலை சிறந்ததெனக் கூறல் மிகையாகாது. உடலை ஊட்டி வளர்க்கும் அன்ன தானத்தைப் போன்றதன்று உயிரை ஊட்டி வளர்க்கும் கல்வி தானம். இஃது அழியாததும், என்றும் மக்களைத் தொடரத்தக்கதுமாகும். இஃது ஈவோர், பெறுவோர் ஆகிய இரு பாலாருக்கும் இன்பத்தையும், அறிவுப் பெருக்கத்தையும் ஒருங்கே ஈயும் வன்மையுடையது. 'இறைக்கும் கிணறு சுரக்கும்,' என்னும் பழமொழியைக் கல்வியினிடம் வைத்து நோக்கின், மிகப் பொருத்தமாகும். கல்வி போதிப்பதை ஒரு தெய்வீகத் தொழில் என்னலாம். இத்தொழிலைப் பெறும் பாக்கியம் நம் நாட்டில் சிலருக்கே கிடைத்துள்ளது. இத்தொழிலி லீடுபட்டவரை ஆசிரியரென வழங்குகின்றோம். இவர், தம்மை அடைந்தவர் அறியாமையைப் போக்கி, அறிவைப் பெருக்கும் சிறப்புறு கருவியாயுள்ளனர். குழந்தைகளின் அறிவையும் ஆன்மாவையும் தக்க முறையில் வளர்ப்பவர் இவரே. ஆசிரியர் ஒருவராலே ஆயிரக்கணக்கான மக்கள் அறிவு பெற்று விளங்குவதை அறியாதார் யார்! கல்விப் பாலூட்டி, அறிவுத் தொட்டிலிலிட்டு, இன்பத்தாலாட்டுப் பாட ஆசிரியர் ஒருவரே தக்கவர் என்பதை யாரால் மறுக்க முடியும்! ஆனால், தந்நலம் பாராட்டாது குழந்தைகளின் மலர்ந்த முகங்காணுமளவும் பொருள்களை அவர்கள் மனத்தில் ஊன்ற வைக்கும் ஆசிரியரே நல்லாசிரியர். மாணவரின் உண்மைத் தேர்ச்சியே தமக்குப் பெருநிதி என்னும் எண்ணம் ஆசிரியர் ஒவ்வொருவர் மனத்திலும் ஊன்றியிருத்தல் நலம்.

ஆசிரியரின் நிலையை இரண்டாக வகுக்கலாம்: அவர் பாடங்களை ஆயத்தஞ் செய்யுங்கால் மாணவராகின்றனர்; போதிக்குங்கால் உபாத்தியாயராகின்றனர். மாணவருக்குப் போதிக்கப் புகும் பாடங்களை ஆசிரியர் முன்னரே கருத்தூன்றி நோக்காவிடில் அவற்றைக் குழந்தைகளின் மனத்தில் ஊன்ற வைத்தல் கூடாதாகும்.

இத்தன்மையில் செய்யுளைத் தக்க முறையில் குழந்தைகளுக்குக் கற்பித்தல் ஆசிரியரின் இன்றியமையாத கடமை. வசன பாடத்தைவிடச் செய்யுட்பாடத்தில் பொருட்செறிவு அதிகம் உண்டு. செய்யுளை ஊன்றி நோக்க நோக்கப் புதிய பொருள்கள் தோன்றிக்கொண்டே இருக்கும் என்பது அறிவுடையோர் அறிந்ததே. புலமையிற் சிறந்த சான்றோரின் செய்யுட்கள், நோக்குவார் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்றவாறு பொருள் தந்து நிற்குமே அன்றி, இவ்வளவுதான் பொருள் என வரையறுத்துக் கூற இடந்தரா. இறைக்குந்தோறும் சுரக்கும் கிணற்றைப் போன்று, செய்யுளும் ஆராயுந்தோறும் பொருள் தோன்றிக்கொண்டே இருக்கும் ஒரு நிதிப் புதையல் எனக் கூறல் மிகையாகாது. இத்தகைய நிதியின் இன்பத்தை நம் இளைஞர் நன்கு துய்க்குமாறு தக்க முறையில் போதித்தல் வேண்டும். வசன பாடத்தைக் காட்டிலும் செய்யுட் பாடம் மனப்பாடம் செய்தற்கு எளிது; பொருளும் தெரிந்துவிடின், துன்பமில்லாமலே மனத்தில் பதிந்துவிடும்.

ஆசிரியர் சம்பாஷணை மூலமாகவோ, கதை மூலமாகவோ, செய்யுட்களின் கருத்து, அனுவயம் (வசன நடை), பதவுரை, பொருள் விளக்கம் முதலியவற்றை இயன்ற வரையும் குழந்தைகளிடமிருந்தே வருவித்து, அவர்கள் அறிவைப் பெருக்க வேண்டுமென்பது தற்கால முறை. இதை ஆசிரியர் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்திருக்கலாம். இம்முறையில் செய்யுளின் பொருளையும், அதற்குத் தொடர்புடைய இயற்கை, சரித்திரம், பூகோள சாஸ்திரம், பொதுப் பொருளின் இயல்பு, நூலாசிரியரின்

உணர்ச்சி முதலியவற்றையும் குழந்தைகள் நன்கு உணர்தற்கு இந் நூல் சிறந்த துணையாகுமென நினைக்கின்றேன். இக் கேள்விகளி ளுல் குழந்தைகளின் அறிவை வளர்த்துக் கடினமான இடங்களில் ஆசிரியர் துணை புரிதல் நலம். இதைப் போன்றே இன்னும் பல கேள்விகளைக் கேட்குங்கால், அவர்கள் அறிவு விரியும். கடின பதங்களை வாக்கியங்களில் அமைக்க மாணவரைத் தூண்டுதல் நல மளிக்கும். ஒவ்வொரு செய்யுளையும் அனுவயப்படுத்தக் கேள்வி கேட்டல் நலம்.

உரைப் பகுதிக்கும் செய்யுட் பகுதிக்கும் உள்ள வேறு பாட்டைச் சிறுவர்கள் நன்கு அறியுமாறு செய்தல் வேண்டும். முன் செய்யுட்களில் படித்த இலக்கணமோ, சொற்களோ, பொரு ளோ பின்னும் வரின், அவற்றை நினைப்பூட்டிக்கொண்டு போதல் குழந்தைகளின் நினைப்பை வளர்ப்பதாகும். செய்யுளில் தோன் றும் பாவனை முதலியவற்றை நன்ருக அறியுமாறு குழந்தைகளைப் பழக்குதல் சாலச் சிறப்புடையது. காணக் கூடியதை வரைதலி ஞலும், உணரக் கூடியதைப் பாவனையினுலும் அவர்கள் மனத்தில் ஊன்றச் செய்ய வேண்டும். இவற்றைச் சிற்சில செய்யுட்களில் எடுத்துக்காட்டியுள்ளேன். இரந்தவர் இன்முகம் காணுமளவும் அவர்களிடம் இரக்கங்கொள்வது எங்ஙனம் பயனற்றதோ, அங் ஙனமே பாடத்தைக் குழந்தைகளின் மனத்தில் ஊன்ற வைக்கு மளவும் நம் போதனையும் பயனற்றதாகும்.

இதிலுள்ள ஒவ்வொரு நூலுக்கும் நூலாசிரியர் வாழ்க்கை, நூலின் போக்கு முதலியன சுருக்கிக் கூறப்பட்டுள்ளன; மாணவர் எட்டாம் வகுப்பு (III Form) முடிப்பதற்குள், பதினெண் கீழ்க் கணக்கு முதலியவற்றுள் ஏறக்குறைய இருபத்தைந்து நூல்களும், பல புலவரால் பாடப்பட்ட தனிப் பாடல்களும், சதகங்களும், பஞ்ச தந்திரக் கதை, புராணக் கதை, விடு கதை முதலியவற்றில் சிலவும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தினுலேயே இந்நூல்கள் தொகுக்கப்பட்டன. ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்களே முயன்று பொருள் காணல் சிறந்தது என்னும் தற்கால முறைக்

கேற்றவாறு ஒவ்வொரு செய்யுளின் கீழும் வினாக்களைக் கொடுத்துள்ளேன். கடின பதங்களுக்குப் பொருளும், கடின சந்தியும் குறிக்கப்பட்டுள்ளன. இவை மாணவர்க்குப் பெரிதும் பயனளிக்கக் கூடும். இப்பயிற்சி அவர்களுக்கு எந்தச் செய்யுளையும் ஊன்றிப் படிக்கும் விருப்பத்தையும், ஆராய்ந்து பார்க்கும் ஆசையையும் உண்டாக்குமென்பது என் கருத்து. இறுதியில் ற, ர, ண, ன, ல, ள இவை அமைந்து வரும் சொற்பொருள் வேறுபாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

கல்வியிலும் அறிவிலும் குறைவுடையேன் இயற்றிய இந் நூலிலுள்ள குற்றங்களைச் சான்றோர் எடுத்துக் காட்டின், மகிழ்வுடனேற்றுத் திருத்திக்கொள்ள முற்படுவேன்.

அரிய எண்ணங்களை அவ்வப்போது மனத்தில் தோற்றுவித்துக் கல்வித் தொண்டு புரிய அருள் புரிந்து வரும் இறைவனுக்கும், ஞானத்தை ஊட்டிய ஆசிரியர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

S. கிருஷ்ணவேணி

# பொருள் அடக்கம்


பொருள் — பக்கம்

I. வணக்கம் ... ... 11

II. நீதிப் புதையல் :

1. மூதுரை ... ... ... 12
2. நல்வழி ... ... ... 21
3. நன்னெறி ... ... ... 30
4. நான்மணிக்கடிகை ... ... 44
5. விவேக சிந்தாமணி ... ... 51
6. தனிப் பாடல்கள் ... ... 55
7. தண்டலையார் சதகம் ... ... 61

III. கதைத் தொகுதி :

1. தேசிங்கு மன்னன் ... ... 65
2. விடு கதை ... ... ... 72

IV. அன்னையின் அன்பு : ... .... 74

எழுத்து வேறுபாடும் பொருள் வேறுபாடும் 77

செய்யுள் முதற்குறிப்பு அகராதி ... 79

# கவி மலர் மாலை

மாலை—2

## I. வணக்கம்

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. 1

மனோன்மணீயம்] [P. சுந்தரம் பிள்ளையவர்கள்

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா, அமரரேறே, ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர, யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

திருமாலை] [தொண்டரடிப்பொடியாழ்வார்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. 3

திருவாசகம்] [மாணிக்க வாசகர்

# II. நீதிப் புதையல்

## 1. மூதுரை

(ஔவையார்)

*உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்*
*பற்றலரைக் கண்டாற் பணிவரோ ?—கற்றூண்*
*பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்*
*தளர்ந்து வளையுமோ தான் ?*

பொழிப்பு

*கருங்கல்லினால் கட்டப்பட்ட தூண், மிகுந்த சுமையைத் தாங்கினும், பிளந்து முறிவதல்லாமல், சோர்ந்து வளையுமோ ? வளையாது. (அதைப் போன்றே) மானக்கேடு நேர்ந்த போது அதைக் காத்தற்பொருட்டுத் தம் உயிரையும் இழக்கும் சீரிய குணம் வாய்ந்த பெரியோர் பகைவரைப் பார்த்தால் அவர்களுக்குப் பயந்து வணங்குவரோ ? (ஒருகாலும் வணங்கார்.)*

குறிப்பு:—*உற்ற இடத்தில்-மானத்திற்குக் கெடுதி உண்டான சமயத்தில், தன்மையோர் - இயல்புடையோர், பற்றலரை - பகைவரை, கல்+தூண்=கற்றூண், இறுவது-முறிவது.*

### வினாக்கள்

1. "*உற்ற இடத்தில்*"—*எஃது உற்ற இடத்தில்* ?
2. "*பற்றலர்*"—பொருளென்ன ?
3. *பகைவர் என்னும் பதத்துக்கு எதிர்ப்பதம் எது* ?
4. *கல்லினால் கட்டப்பட்ட தூண் என்ன ஆகும் ? வேறு எதனால் செய்யப்பட்ட தூண் தளர்ந்து வளையும் ?*

5. எங்கெங்கே தூண்கள் நாட்டப்படுகின்றன? எதற்காக?
6. பணிய மாட்டார்—யார்? யாரை?
7. பொறுமை, பெருமை, வீரம், சினம் இந்த நான்கினுள் இந்தச் செய்யுள் எதைப்பற்றிச் சொல்லுகிறது?
8. உலகத்தில் சாதாரண மக்கள் எதை அதிக உயர்வு என நினைக்கின்றார்கள்?
9. அதையும் சான்றோர் என்ன செய்கின்றனர்? இச்செய்யுளில உள்ள அசைச்சொல் எது?

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம். 2

பொழிப்பு

எங்ஙனம் நீரில் வளரும் அல்லி மலர் நீரினது உயரத்தின் அளவாகவே வளருமோ, அங்ஙனம் ஒருவருக்குக் கூரிய (மிகுந்த) அறிவு தாம் படித்த நூல்களின் அளவாகவும், ஒருவர் அடைந்த செல்வம் அவர் முற்பிறவியில் செய்த தவத்தினளவாகவும், ஒருவர் குணம் தாம் பிறந்த குடிக்கேற்றவாறும் துலங்கும்.

குறிப்பு :—ஆம்பல்-அல்லி, நுண் அறிவு-கூர்மையான அறிவு, 'ஆம்' மூன்றும் அசைகள்.

வினாக்கள்

1. இச்செய்யுளில் எத்தனை விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன? அவை என்னென்ன?
2. 'நீரளவே யாகுமாம் நீராம்பல்.'—நீரளவே ஆவது மலரா? தண்டா?
3. எந்தப் புத்தகங்களைக் கற்றால் நுண்ணறிவு உண்டாகும்?
4. செல்வம் எதனளவிலே நிற்கும்?

5. இட்டார் எந்தக் குலத்தைச் சார்ந்தவர் ?
6. அவர் குணம் எப்படி இருக்கும் ?
7. 'பெற்ற'—இதற்குப் பகுதி என்ன ?

பண்டு முளைப்ப தரிசியே யாணும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். 3

பொழிப்பு

உமி நீங்குதற்கு முன்பு முளைத்துப் பயன் தருவது அரிசியே ஆகிலும், உமி நீங்கிய பிறகு அவ்வரிசி முளைப்ப தில்லை. (அதுபோல) மிகுதியும் வல்லமை பெற்றவரும் தக்க துணை வலியில்லாமல் தாம் மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதற்கு முடியாது.

குறிப்பு:—பண்டு-முன்பு, விண்டு + உமி-விண்டுமி-(உமிவிண்டு) உமி நீங்கி, பேர் ஆற்றல்-மிகுந்த வன்மை, அளவு இன்றி-துணை வலி இல்லாமல், ஏற்ற கருமம்-எடுத்துக்கொண்ட காரியம்.

வினாக்கள்

1. அரிசி எப்போது முளையும் ? ஆனால், முளையும் சக்தி எதில் இருக்கிறது ?
2. நெல் விளையும் இடத்திற்குப் பெயர் என்ன ?
3. உழவுத்தொழில் செய்வோனை என்ன என்று வழங்குகிறோம் ?
4. நெல்லுக்குத் துணை எது ?
5. வன்மை என்பதற்கு எதிர்ப்பதம் எது ?
6. மழை பெயல் இல்லை. இதில் பெய்யல் என்பது இடை எழுத்தாகிய ய் என்ற எழுத்து மறைந்து பெயல் என வந்துள்ளது. இதைத் தொகுத்தல் விகாரம் எனக் கூறுகின்றோம். இத்தகைய சொல் இந்தச் செய்யுளில் இருந்தால் சொல்.

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. 4

பொழிப்பு

நீர் வற்றிய குளத்தை விட்டு நீங்கும் நீர்ப்பறவைகளைப் போன்று ஒருவருக்கு வறுமை முதலிய துன்பம் நேர்ந்த காலத்தில் அவரை விட்டுப் பிரிபவர், மனம் பொருந்திய சுற்றத்தினராகார். அக்குளத்தை விட்டு நீங்காத கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகிய நீர்ப்பூக்களைப் போன்று நேர்ந்த துன்பத்தை அவருடனிருந்து அனுபவிப்பவரே சிறந்த உறவினராவர்.

குறிப்பு :—அற்ற-நீர் வற்றிய, அறு-நீங்குகின்ற, உற்ற உழி-வறுமை வந்தபொழுது, ஒட்டி-நீங்காது சேர்ந்திருந்து.

வினாக்கள்

1. நீர் வாழ் பறவைகள் இரண்டைக் கூறு.
2. யார் உண்மை உறவினர் ?
3. உறவு, உரவு; பறவை, பரவை-இவற்றின் பொருள் வேறுபாட்டைக் கூறு.
4. பட்சிகளின் முக்கியமான தொழிலென்ன ?
5. பரவை என்பது கடல். கடல் பரந்திருப்பதனால் இப்பெயர் பெற்றது. இவ்வாறு ஒரு பொருள் காரணத்தினால் பெயர் பெறுமாயின், காரணப்பெயர் எனச் சொல்லுவர். இம்முறையில் இச்செய்யுளில் காரணப்பெயர் ஏதாவது உண்டா ?
6. நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, செடிப்பூ எனப் பூக்கள் நான்கு வகையாகும். அவற்றுள் இப்பூக்கள் எவ்வினத்தைச் சார்ந்

தவை? எந்நிறத்தை உடையவை? ஒவ்வோர் இனத்திலும் உள்ள இரண்டிரண்டு பூக்களைச் சொல்லு.

7. இச்செய்யுளின் சிறந்த கருத்தென்ன? இச்செய்யுளிலுள்ள பெயர்ச் சொல் வினைச்சொற்களைக் குறிப்பிடு.

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். 5

## பொழிப்பு

கீழோர், கொடிய கோபத்தினால் ஒருவரை விட்டுப் பிரியின், கல்லின் பிளவு போலத் திரும்பவும் சேரமாட்டார். சிலர் அப்படிப் பிரிந்த போது பொன்னின் பிளவுபோல (ஒருவர் நடுவே இருந்து சேர்க்கக் கோபத்தை மறந்து) கூடுவர். சீர்மை மிகுந்த மேன்மக்களுடைய சினமோ, வில்லைப் பிடித்து அம்பினாலே நீர் பிளவுபட விடுத்த குறி போல அப்போதே நீங்கிவிடும்.

குறிப்பு:—கயவர் - கீழோர் (அற்பர்), பொன் + பிளவு = பொற்பிளவு, வடு - அடையாளம், சான்றோர் - மேன்மக்கள்.

## வினாக்கள்

1. கயவர், சான்றோர் இவர்கள் சினத்திற்கு எவை ஒப்பிடப்பட்டிருக்கின்றன?
2. பிளவுபட்ட பொன் எப்போது கூடும்?
3. வில் எப்படி இருக்கும்? அதில் எதை வைத்து எய்வார்கள்? வில் வித்தையில் வல்லவர் ஒருவரைச் சொல்லு.
4. தண்ணீர் இரண்டாகப் பிளவுபடுமா? ஆனால், எப்போது பிளவுபடும்? அப்பிளவு எவ்வளவு நேரம் இருக்கும்?
5. 'ஆறுவது சினம்' என்பதற்குப் பொருளென்ன?

6. மிக்க கோபத்தினால் உண்டாகும் கெடுதிகள் இரண்டைக் கூறு.
7. சான்றோருக்கு அடை மொழி என்ன ?

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 6

## பொழிப்பு

குளத்தில் உள்ள அழகிய தாமரை மலரைச் சிறந்த அன்னம் சேர்ந்தது போல, அறிவு நூல்களைக் கற்றவரைக் கற்றவரே விரும்பிச் சேர்வர். சுடுகாட்டில் உள்ள பிணத்தைக் காக்கை விரும்புவது போலச் சிறந்த நூல்களைக் கல்லாத மூடரை, மூடரே விரும்புவர்.

குறிப்பு:—கயத்தில் - குளத்தில், காமுறுவர் - விரும்புவர், முகப்பர் - விரும்புவர், முதுகாட்டில் - சுடு காட்டில், உகக்கும் - விரும்பும், கற்பு + இலா = கற்பிலா - கல்வி இல்லாத, நல் + தாமரை = நற்றாமரை.

## வினாக்கள்

1. தாமரை எதைக்கண்டு மலரும்? எதைக் கண்டு குவியும் ?
2. தாமரையின் குணம் நல்லது என்பதற்குக் காரணம் என்ன ?
3. அன்னப் பறவையின் குணம் யாது ?
4. உடலைப் பிணம் என்று எப்போது சொல்லுகிறோம்?
5. கற்றோர், மூர்க்கர் இவர்களுக்குத் தனித்தனியே எவ்வெப் பொருள் ஒப்பிடப்பட்டிருக்கிறது ?
6. முதுகாடு-இதற்கு வேறு பெயர்கள் எவை ?
7. காக்கைக்குக் கேட்கும் சக்தி உண்டா ?
8. காக்கை உண்ணும்போது என்ன செய்யும்? இச்செய்யுளில் ஈறு கெட்ட சொல் எது ?

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 7

பொழிப்பு

விடமுள்ள நாகப்பாம்பு தன்னிடம் நஞ்சுள்ளதை அறிந்து ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்து வசிக்கும், விடமற்ற நீர்ப்பாம்போ, எவருக்கும் அஞ்சாமல் வெளிப் புறத்தில் கிடந்துறையும். (அவை போல), உள்ளத்தில் வஞ்சனையுடையார் தம்மைத்தாம் மறைத்துக்கொண்டே திரிவர். வஞ்சனையற்ற உள்ளத்தவரோ, தம்மைத்தாம் மறைத்துக்கொண்டு திரியார்.

குறிப்பு:—நாகம் - விடப்பாம்பு, கரந்து - மறைந்து, கரவு - வஞ்சனை, புறம் - வெளி, உறையும் - வசிக்கும்.

வினாக்கள்

1. தம்மைக் கரப்பவர் யார்? கரவார் யார்?
2. உறை, உரை; அறிந்து, அரிந்து; புறம், புரம்-இவற்றின் பொருள் வேறுபாட்டைக் குறிப்பிடு.
3. நாகத்திற்கும், நீர்ப்பாம்பிற்கும் உள்ள வேற்றுமை என்ன?
4. பாம்பிற்கு எங்கே விஷம் உண்டு? வாலில் விஷமுள்ள பிராணி எது?
5. தீயோருக்கு எங்கே விஷமிருக்கும்?
6. இச்செய்யுளில் ஈறு கெட்ட சொற்கள் எவை?
7. கரவுடையார், கரந்துறையும்-இவற்றைப் பிரி.
8. கரவுடையாருக்கு எஃது ஒப்பிடப்பட்டிருக்கிறது?

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா ததலால்—தந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று. 8

பொழிப்பு

மிருதுவான சந்தனக்கட்டை தேய்ந்து உருவத்தில் குறையினும், தன் மணத்தில் குறைவுபடாது. ஆகையினால், மாலையை அணிந்த அரசர் தத்தம் செல்வத்தில் குறைவு படினும், அவ்வறுமையினாலே மனம் சுருங்கினவராவரோ! ஆகார்.

குறிப்பு:—குறடு - கட்டை, கந்தம் - வாசனை, தார் - மாலை.

வினாக்கள்

1. குறடு, கந்தம்—பொருளென்ன?
2. சந்தன மரம் எந்த இடத்தில் அதிகமாக வளரும்?
3. 'மனஞ்சிறியர் ஆவரோ?' யார்?
4. இச் செய்யுளில் அசைச்சொல் எது?
5. 'அட்டாலும் பால்சுவையிற் குன்றாதளவல்ல நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்'—என்னும் செய்யுளில் 'சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்,' என்னும் அடி எந்த அடிக்கு ஒப்பானது?

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். 9

பொழிப்பு

உயர்ந்து தழைத்த மரங்கள், மனிதர் தங்களை வெட்டிக் குறைக்குந்தோறும், அவர்களுக்கு குளிர்ந்த நிழலைக் கொடுத்து, வெயிலை மறைக்கும். (அதுபோல) அறிவிற் சிறந்த சான்றோர் தாம் இறக்குமட்டும் பிறர் தமக்குத் தீமைகளையே செய்திடினும், தாம் அவரைத் தம்மாலான மட்டும் காப்பார்.

குறிப்பு:—ஆம் தனையும் - தம்மாலே ஆகும் அளவும், ஆம், கண்டீர் என்பன அசைகள்.

## வினாக்கள்

1. மரத்தின் தன்மை என்ன?
2. மர நிழல் எப்போது நமக்கு மிக்க இன்பத்தைத் தரும்?
3. 'ஆந்தனையும் காப்பர்' யார்? யாரை?
4. தீயன செய்வாரைச் சாதாரண மக்கள் என்ன செய்வார்கள்?
5. அசைச் சொல் எது?
6. இதிலுள்ள அஃறிணை, உயர் திணைச் சொற்களை எடுத்துக் காட்டு.

## 2. நல்வழி

(ஔவையார்)

உள்ள தொழிய ஒருவர்க் கொருவர் சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு. 1

பொழிப்பு

ஒருவர்க்கு ஊழினால் உள்ளன (கிடைத்தன) ஒழிய மற்றொருவர் சுகங்களைத் தாம் அனுபவிக்க விரும்பினும் அவை கூடாவாம். (ஆதலால்) உலகத்தில் அழியும் உடலோடுங்கூடி வாழும் உயிர்கள் மிகுந்த நீரையுடைய கடலில் பிரயாணஞ் செய்து பெரும்பொருள் திரட்டித் திரும்பி வந்து கரை ஏறினாலும் அடையும் பயனென்ன? (ஊழின் அளவன்றி அனுபவித்தல் கூடாதன்றோ?)

குறிப்பு :—குவலயத்தில் - பூமியில், மீண்டு - திரும்பி வந்து.

வினாக்கள்

1. 'கொள்ளக் கிடையா' எவை?
2. கடலில் எப்படிப் பிரயாணம் செய்கிறார்கள்?
3. கொள்ளக் கிடையா—தடித்த எழுத்திலுள்ள பதத்திற்கு இலக்கணம் கூறு.
4. உயிர் எதனோடு வாழும்?
5. உயிர், உடல் இவற்றில் எது சிறந்தது?
6. முற்காலத்துக் கப்பலுக்கும், தற்காலத்துக் கப்பலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

எல்லாப் படியாலு மெண்ணிறு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினு லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேரார் பிறர்க்கு. 2

பொழிப்பு

எவ்வகையினுல் ஆராய்ந்து பார்க்கினும், இவ்வுடல் கொடிய புழுக்களுக்கும் மிகுந்த நோய்க்கும் அற்பக் குடிசையாய் உள்ளது. நல்லறிவுடைய சான்றோர் இவ்வுடலின் இழிவை நன்கு உணர்ந்திருப்பாராதலின், தாமரை இலையில் படிந்த நீர்போல உடம்பினிடம் பற்று வையாமல் வேறுபட்டிருப்பார்; பிறரிடமும் இவ்வுடலைப் பற்றிப் பெருமையாகப் பேசமாட்டார்.

குறிப்பு :—எல்லாப்படியாலும் - எல்லா வகையாலும், மலி - மிகுந்த, புல்+குரம்பை=புன்குரம்பை - அற்பக் குடிசை, கமலம் - தாமரையிலை.

விஞக்கள்

1. இவ்வுடம்பு எப்படிப்பட்டது ?
2. இக்குரம்பையில் எஃது இருக்கிறது ?
3. ‘பிரிந்திருப்பார்’ யார் ? எப்படி ?
4. இங்குக் கமலம் என்பது இலையா ? மலரா ?
5. கமலம் என்பதற்கு வேறு பெயர் என்ன ?
6. தாமரை இலையின் வடிவம் என்ன ? அதன் பயன் யாது ?
7. தாமரை இலையில் நீரை விட்டால் எப்படிக் காணப்படும் ?

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 3

பொழிப்பு

நீர்ப்பெருக்குடைய ஆற்றோரத்தில் உள்ள மரமும் அரசன் அறியுமாறு செல்வத்தில் சிறந்திருக்கும் பெரு வாழ்வும் ஒரு காலத்தில் தாழ்வடைந்து அழிந்துவிடும் அல்லவா? (ஆதலின்,) ஒருவன் தன் சொந்த நிலத்தை உழுது பயிரிட்டு உண்டு வாழும் வாழ்வே உயர்வு உடையதாகும். அதற்கு நிகரான வாழ்க்கை வேறொன்று மில்லை. வேறு தொழிலினால் வாழும் எந்த வாழ்க்கைக் கும் குற்றம் உண்டு.

குறிப்பு:—ஏற்றம் - உயர்வு, கண்டீர் - அசை.

வினாக்கள்

1. எப்படிப்பட்ட வாழ்வும் ஒருகால் என்ன ஆகும்?
2. நீருக்கு அருகில் இருக்கிற மரத்திற்கும், நீரில்லாத இடத்தில் இருக்கிற மரத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன? ஏன்?
3. இப்பாட்டில் அசைச்சொல் எது?
4. மரம் எந்த வாயுவை உட்கொள்ளுகிறது? எந்த வாயுவை வெளி விடுகிறது? இதனால் மக்கள் அடையும் நன்மை யாது?
5. உலகில் எந்தப் பணி சிறந்தது?
6. வயலை உழுதற்கு என்னென்ன வேண்டும்? வயல்கள் அதிக மாகக் காணப்படுவது நகரிலா, நாட்டிலா?
7. பழுதுள்ள பணிகள் எவையேனும் இரண்டைக் கூறு.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா(து)
உயிர்விடுகை சால வுறும்.

பொழிப்பு

சொல்லத் தொடங்கினால், பிறர்க்குப் பிரியமான வார்த்தைகள் பல கூறி அவரை நெருக்கிப் பொருள் பெற்று உண்ணுதலே பிறரிடஞ்சென்று யாசித்து உண்பதைக் காட்டிலும் மிக இழிந்த வாழ்க்கையாகும். சிச்சீ! (இஃது என்ன இழிவான செய்கை!) வயிறு வளர்க்கைக்கு இவ்வாறு மானங்கெட வாழ்வதைக்காட்டிலும், (மானத்தை நிலை நிறுத்த) உயிரை விடுதல் மிகவும் பொருத்தமாகும்.

குறிப்பு:—இடித்து - நெருக்கி, சால உறும் - மிகவும் பொருந்தும்.

வினாக்கள்

1. 'மூத்த'—எதில் மூத்த?
2. இஃது எப்படிப்பட்ட வாழ்க்கை?
3. சிலர் ஏன் இவ்விழிவான வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றனர்?
4. இவரால் பிறருக்கு உண்டாகும் துன்பங்கள் எவை?
5. உயிர், மானம் இவை இரண்டில் எது சிறந்தது?
6. விருப்பு, அழிதல் இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் கூறு.

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றா ருகந்தா ரெனவேண்டார்—மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம். 5

பொழிப்பு

இப்பெரிய உலகத்தில், தம்மைப் பெற்ற தாய்தந்தையர், தம் உடன் பிறந்த சகோதரர், தம் பெரிய தேசத்தினர், தம் சுற்றத்தினர், தம்மிடம் அன்பு பாராட்டியவர் என விரும்பாத உலோபிகள், தங்களுக்கு நன்மை புரி

கின்ற மேற்கூறியவர்கள் வந்து தங்களை அடைக்கலம் புகுந்தார்களாயினும், அவர்களுக்கு ஒன்றையும் கொடுக்க மாட்டார்கள்; ஆனால் தங்கள் உடம்பில் காயமுண்டாக்கிப் புண் செய்யும் பிறர்க்கு யாவற்றையும் கொடுப்பார்கள்.

குறிப்பு:—இரணம் கொடுத்தால் - (தம்முடம்பிலே) புண் செய்தால், சரணம் கொடுத்தாலும் - அடைக்கலம் புகுந்தாலும், தான், ஏ-அசைகள்.

## வினாக்கள்

1. பெற்றோர், தாய் தந்தையர், பிறந்தார் யாவர்?
2. மற்றோருக்குக் கொடாதவரை என்னென்ன வழங்குகின்றோம்?
3. இச்செய்யுளில் உள்ள அசைச்சொற்கள் எவை?
4. உலோபிகள் எப்போது பிறர்க்கு ஈவார்கள்?
5. 'பெரியோர் தாமே சென்று பிறருக்குக் கொடுப்பர்' என்பதற்கு நீ முன் படித்த செய்யுளிலிருந்து ஓர் உதாரணம் சொல்லு.

ஒன்றை நினைக்கி னதுவொழித்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். 6

## பொழிப்பு

ஒரு பொருளைப் பெற நினைத்தால், அப்பொருள் கிடைக்காமல், வேறொரு பொருள் கிடைப்பினும் கிடைக்கும். அவ்வாறல்லாமல், சில சமயங்களில் அப்பொருளே வந்து சேரினும் சேரும். நினையாத ஒரு பொருள் முன் வந்து நிற்பினும் நிற்கும். இவை யாவும் என்னையாளும் கடவுளின் செய்கைகளேயாகும்.

கடவுள் கருத்தின்படி முடிதலே அன்றி, மக்கள் கருத்தின்படி ஒன்றும் முடிவதில்லை.

குறிப்பு :—எய்தும் - கிடைக்கும்.

## வினாக்கள்

1. எது வந்தெய்தும்? எஃது ஒழியும்? எது நிற்கும்?
2. யார் கருத்தின்படி நம் காரியங்கள் நடைபெறுகின்றன?
3. ஈசனுக்கு வேறு பெயர்கள் எவை?
4. இப்பாட்டில் இடையெழுந்துத் தொக்க சொல் எது?
5. ஒன்றை என்பது என்ன வேற்றுமை? இதன்மேல் மூன்றும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளை ஏற்றிச் சொல்லு.
6. 'ஆவாரை யாரே அழிப்பர்?' என்ற செய்யுளுக்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி. 7

## பொழிப்பு

அரசனே, மாந்தர் தாம் தாம் முன் பிறப்பில் செய்து வைத்த நல்வினை தீவினைகளைத் தாமரையிலிருக்கும் பிரமன் (எழுதிய) எழுத்தின்படியே தாம் தாமே அனுபவித்தல் வேண்டும். ஆதலின், நம் தீவினையினால் ஏவப்பட்டு நமக்குத் தீங்கு இழைத்தவரை நாம் என்ன செய்யலாம்? ஊரிலுள்ளார் எல்லாரும் ஒன்றாகக் கூடி வெறுத்துத் தள்ளினும், நம் தீய விதிப்பயன் ஒழியுமோ? ஒழியாது.

ஆதலால், முன்செய்த தீவினைக்கேற்பவே நாம் துன்பங்களை அனுபவிக்கின்றோம் எனத் தேறியிருத்தலே அறிவுடைமையாகும்.

குறிப்பு :—பூந்தாமரையோன்-தாமரை மலரிலிருக்கின்ற பிரமன், பொறி வழியே—(எழுதிய) எழுத்தின்படியே, ஒறுத்தாரை-தீங்கு செய்தாரை.

## வினாக்கள்

1. 'அனுபவிப்பார்' யார்? எதை?
2. 'பூந்தாமரையோன்' யார்? ஏன் அவனுக்கு இந்தப் பெயர் வந்தது? இஃது என்ன பெயர்?
3. இன்னும் தாமரையில் தோன்றினவர் யார் யார்?
4. பொறி, பொரி இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுது.
5. என்ன செய்தாலும் போகாதது எது?
6. ஒறுத்தல் வெறுத்தல் இவைகளுக்குப் பொருள் கூறு.

ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து. 8

## பொழிப்பு

பெரிய உலகத்திலுள்ளவர்களே, ஆற்று வெள்ளத்தினால் உண்டாக்கப்படும் (ஏற்படும்) மேடும், பள்ளமும் போல இவ்வுலகச் செல்வம் பெருகுவதும், குறைவதுமாய் இருக்கும். ஆதலின், பொருளுள்ள போதே ஏழைகளுக்கு அன்னங் கொடுங்கள்; தண்ணீர் வாருங்கள். (இப்படிச் செய்வீர்களாயின்,) அத்தருமமே உங்களுக்குத் துணையாயிருக்க, உள்ளத்தில் தூய்மை ஓங்கி வளரும்.

குறிப்பு:—மடு-பள்ளம், சார்பு ஆக - துணையாக, உள் + நீர்மை = உண்ணீர்மை-மனப்பண்பு, வீறும்-ஓங்கி விளங்கும்.

## வினாக்கள்

1. செல்வம் எதைப்போன்று அழிகிறது? எதைப்போன்று வளர்கிறது?
2. ஆற்றில் மேடும் பள்ளமும் எப்போது உண்டாகின்றன?
3. நாம் உலகில் செய்யவேண்டிய முக்கியக் கடமை என்ன?
4. அதனால் நமக்கு என்ன நன்மை உண்டாகும்?

5. உடலைத் தூய்மைப்படுத்துவது எது? நெஞ்சைத் தூய்மைப் படுத்துவது எது?
6. முன் நம் நாட்டில் தருமத்தில் சிறந்த இருவரைக் குறிப்பிடு.

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 9

பொழிப்பு

வன்மையுடைய யானையின் உடலில் ஊடுருவிச் செல்லும் அம்பு, பஞ்சுப்பொதியை ஊடுருவிச் செல்லாது. நீண்ட இரும்பினால் செய்யப்பட்ட கட்டபாரைக்கும் பிளவுபடாத கருங்கற்பாறை, பசிய மரத்தின் மிருதுவான வேருக்குப் பிளவுபடும். (அவ்வாறே,) கடுஞ்சொற்கள் இன்சொற்களை வெல்ல முடியாமல் தோல்வியடையும்.

குறிப்பு:—வெட்டெனவை — கடுஞ்சொற்கள், மெத்தெனவை- இன்சொற்கள், நெடு+இருப்பு+பாரை=நெட்டிருப்புப் பாரை - நெடுமையான இருப்புப்பாரை, பாறை - கருங்கல்.

வினாக்கள்

1. 'வெட்டெனவை, மெத்தெனவை' எவை?
2. எது பஞ்சிற் பாயாது?
3. 'பாறை'—எப்படிப்பட்ட பாறை?
4. 'நெக்கு விடும்'—எதற்கு?
5. 'இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம் வன்சொலா லென்றும் மகிழாதே' என்னும் செய்யுளுக்குத் தகுந்த பொருள் இச்செய்யுளில் எந்த வார்த்தைகளில் உள்ளது?
6. 'பாரை, பாறை'—பொருளின் வேறுபாட்டை விளக்கு.
7. வேர் மரத்திற்கு என்ன உதவி செய்கிறது?
8. பாரை எதற்குப் பயன்படும்?

9. இன்சொல், வன்சொல் இவற்றுள் ஒவ்வொன்றையும் ஐந்து வரிகளில் விளக்கு.

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 10

பொழிப்பு

திருவள்ளுவ நாயனர் செய்த திருக்குறளும், சிறப்பு வாய்ந்த நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், (திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகிய இம்) மூவரின் தேவாரமென்னும் இனிய தமிழ் வேதமும், (மாணிக்க வாசகர் என்னும்) முனிவர் திருவாய் மலர்ந்த திருக்கோவையாரும் திருவாசகமும், திருமூல நாயனருடைய திருமந்திரமும் ஒரு பொருளையே குறிப்பவை என்பதை நீ அறிந்துகொள்வாயாக.

குறிப்பு :—தேவர் - திருவள்ளுவர், நான்மறை - (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும்) நான்கு வேதங்கள் ; மூவர் - திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தர மூர்த்தி நாயனர் ; தமிழ் - மூவருடைய தேவாரம், முனி மொழியும் - வாதவூர் முனிவராகிய மாணிக்க வாசகர் மொழிந்தருளிய, கோவை - திருக்கோவையார், திருமூலர் சொல் - திருமூல நாயனருடைய திருமந்திரம்.

வினாக்கள்

1. குறளின் ஆசிரியர் யார்?
2. மூவர் யார்? முனி யார்? இவர்கள் செய்த நூல்கள் யாவை?
3. திருமூலர் எந்த நூலைச் செய்தார்?
4. இவைகள் எந்த மதத்தைச் சார்ந்த நூல்கள்?
5. வைஷ்ணவர், கிறிஸ்தவர் இவர்களுக்கு மெய்ந்நூல்கள் எவை?
6. இந்நூல்களில் பொதுவாக என்ன சொல்லப்படும்?

## 3. நன்னெறி

(சிவப்பிரகாசர்)

நன்னெறி என்பது நல்ல நீதி வழிகளைக் கூறும் நூல் எனப் பொருள்படும். இது **துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால்** அருளிச் செய்யப்பட்டது. இவர் காலம் இருநூற்றெண்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது; இவர் சமயம் **சைவம்**. இவர் தந்தையார், கச்சி நகரத்தில் வேளாளர்க்குக் குருவாயிருந்த **குமாரசுவாமி தேசிகராவர்**. சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இளமையிலேயே தமிழிற் சிறந்த ஞானமிருந்தது. அன்றியும், இவர் கவி இயற்றுவதிலும் வல்லுநராயிருந்தனர்; பாண்டி நாட்டில் **சிந்து பூந்துறையி**லுள்ள தருமபுர ஆதீனத்து **வெள்ளியம்பலவாணத் தம்பிரானை** ஆசிரியராயடைந்து, இலக்கண இலக்கியங்களைக் கற்றுணர்ந்தனர். இவர் பாடல்கள் திருவெங்கை மாநகரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை அணி செய்தன. அவற்றுள் தமக்கு உதவி புரிந்த அண்ணாமலை ரெட்டியாரை ஆங்காங்குப் புகழ்ந்து பாடியுள்ள இவர் நன்றி பெரிதும் பாராட்டத் தக்கதாகும். இவர் செய்த வேறு நூல்கள் கோவை, கலம்பகம், உலா, அலங்காரம், சோண சைல மாலை, நால்வர் நான்மணி மாலை, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி முதலிய பலவாகும்.

இவருக்குப் **பொம்ம புரத்தில்** சில நாட்கள் எழுந்தருளி இருக்க நேர்ந்தது. ஒரு நாள் தனியாகக் கடற்கரை மணற் பரப்பில் வீற்றிருக்கும் போது சில அரிய எண்ணங்கள் இவர் நெஞ்சில் தோன்றின. அவைகள் அழகிய நாற்பது பாக்களாய் வெளிக்கிளம்பின. அப்பாக்களடங்கியதே **நன்னெறி** என்னும் இந்நூலாகும். இதில் இவர் யாவரும்

நன்கு அறிந்த உவமானங்களையே பெரும்பாலும் ஆண்டுள்ளனர். அவற்றிற்குத் தக்க உவமேயங்களை இடத்திற்கேற்பப் பொருத்தியுள்ள தன்மை யாவராலும் கொண்டாடத் தக்கதாகும். இந்நூல் கற்போருக்கு இன்பத்தையும் அறிவையும் ஊட்டுந் திறத்தை உடையது. இதில் ஞாயிறு, திங்கள், கடல் முதலிய இயற்கைப் பொருள்கள் பல காட்சி அளிக்கின்றன. குழந்தைகளின் அறிவிற்கேற்றவாறு பொருள்களை மிக்க திறம்படக் குறித்துள்ளார். உவமானங்களின் இயற்கைத் தத்துவங்களை மிக நயமாக எடுத்துக் கூறும் முறை பெரிதும் கொண்டாடத் தக்கதாகும்.

என்று முகம னியம்பா தவர்கண் ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொறிகுழலாய் பூங்கை புகழ்வோ
நாவிற் குதவு நயந்து. 1

பொழிப்பு

பூவினால் விளங்குகின்ற கூந்தலையுடைய பெண்ணே, தன்னைப் புகழ்ந்து சொல்லுவதனாலோ அழகிய கையானது மிகுந்த சுவையுள்ள பண்டங்களை நாவிற்கு விருப்பத்துடன் கொடுத்து உதவுகின்றது? (இல்லை அல்லவா?) குற்றமற்ற பெரியோர் எக்காலத்திலும் தமக்கு உபசார வார்த்தைகள் சொல்லாதவர்களிடத்தும் தாமே சென்று அவர்களுக்கு வேண்டிய பொருளைத் தந்துதவுவர்.

குறிப்பு:—முகமன் இயம்பாதவர்கண்ணும் - உபசார வார்த்தைகளைச் சொல்லாதவரிடத்தும், தீது + அற்றோர் = தீதற்றோர், துன்று சுவை - மிக்க சுவையுள்ள, பொலி - விளங்குகின்ற, குழலாய் - கூந்தலை உடையவளே, பூ + கை = பூங்கை - அழகிய கை, நயந்து - விரும்பி.

### வினாக்கள்

1. இச்செய்யுள் யாரைப் பார்த்துக் கூறியது?
2. இஃது அவரை என்ன விதமாய் விளிக்கிறது?
3. குழல், குழை இவ்விரு சொற்களுக்கும் பொருளென்ன?
4. இச்செய்யுளை வாசக நடையில் (அனுவயப்படுத்திக்) கூறு.
5. தீதற்றோருக்கு எஃது ஒப்பிடப்பட்டிருக்கிறது?
6. தீதற்றோரின் செய்கை யாது?
7. தீதற்றோர் என்ன திணை? கை என்ன திணை?
8. கை, நாவிற்கு என்ன உதவி செய்கிறது?

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 2

### பொழிப்பு

மேகம் போய்ப் பிறர்க்கு உதவி செய்யாத கரிய கடலின் நீரை மொண்டு வந்து, மற்றவர்க்குப் பெய்து நன்மையைத் தரும். (அதுபோலப்) பிறர்க்கு உதவி செய்யாதவருடைய மிக்க செல்வம் வேறேயாயினும், அது பிறர்க்கு உதவி புரிகின்றவருடைய செல்வமேயாகும்.

குறிப்பு:—புயல் - மேகம், முகந்து - மொண்டு, செய்யா - செய்யாத, பெய்யா - பெய்து.

### வினாக்கள்

1. கடல் நீரை உண்ணீர் ஆக்குவது எது?
2. மேகம் எதனால் உண்டாகிறது?
3. யாருடைய செல்வம் யாருக்குச் சொந்தமாகிறது?
4. மேகத்திற்கு ஒப்பானவர் யார்?

5. யாரை உலோபிகள் எனக் கூறுவர்?
6. நடவா நொண்டிப் பையன் மயில் ஆடுவதைக் காணு மகிழ்ந் தான். இவ்வாக்கியத்தில் நடவா, காணு என்பவைகளுக் குப் பொருளென்ன?
7. இவ்விதமான சொற்கள் இச்செய்யுளில் இருப்பின் குறிப்பிடு.

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மை நிலை போம். 3

## பொழிப்பு

மலரினுல் அலங்கரிக்கப்பட்ட கூந்தலை உடையவளே, நெல்லிலிருந்து உமி சிறிது நீங்கி முன்போலவே சேர்ந் தாலும், முளைத்தற்கேற்ற வன்மை போய்விடும். (அது போல) என்றும் பிரிதலில்லாத இரண்டு நட்பினர், சில காரணங்களினுல் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து மறுபடி யும் கூடினுலும், ஆராய்ந்து பார்க்கின், அந்நட்பினரின் பெருமை அற்பமாகும்.

குறிப்பு:—நொய்தாகும் - அற்பமாகும், புல்லினும் - கூடினு லும், திண்மை நிலை - வலிமையின் நிலை.

## வினுக்கள்

1. திண்மை என்பது என்ன? நெல்லுக்கு என்ன விதமான திண்மை உண்டு?
2. நீக்கம் அறும் இருவரை என்னென்று வழங்குகிறோம்?
3. இச்செய்யுளின் உவமானம், உவமேயம் என்ன? அவ்விரண் டும் என்ன திணைகள்?
4. எப்படிப்பட்டவரோடு கொண்ட நட்பை விடின், பெருமை குறையும்?

5. புல்லினும்—இதற்கு எதிர்ப்பதம் என்ன?
6. நீக்கமறுமிருவர் எதைப் போன்றவர்?

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 4

பொழிப்பு

உள்ளத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டு கிளம்பி வருகின்ற கோபத்தை வளராமல் அடக்கிக்கொள்ளும் குணமே சிறந்த குணமென அறிவாயாக. பெருகி வரும் வெள்ளத்தை வராமல் கரை கட்டித் தடுத்தல் அருமை உடையதோ, அன்றி, முன்னுள்ள விசாலமான கரையை உடைத்துக்கொண்டு வெள்ளம் வெளியே செல்லுமாறு பேர்த்து விட்டுவிடுதல் அருமையுடையதோ? நீ கூறுவாயாக.

குறிப்பு:—ஓங்கு - வளர்கின்ற, தடம் கரை - பெரிய கரை, பேர்த்து - உடைத்து, விளம்பு - சொல்லு, தான் - அசை.

வினாக்கள்

1. கோபம் நம் உள்ளத்தை என்ன செய்கிறது?
2. உள்ளம் என்பதற்கு வேறு பெயர்கள் என்ன?
3. சினத்தினால் உண்டாகும் கெடுதிகள் எவை?
4. வெள்ளத்தை எதனால் தடுக்கலாம்?
5. இவ்வாறு தடுத்திருக்கின்ற இடம் ஏதேனும் உனக்குத் தெரியுமா?
6. வெள்ளத்தைத் தடுக்காமல் விட்டால், என்ன நேரிடும்?
7. குணங்களுள் அருமையான குணம் எது?
8. உள்ளம்—என்ன வேற்றுமை? இதை நான்காம் வேற்றுமையாக்கி வாக்கியத்தில் அமை.

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே னின்று. 5

## பொழிப்பு

வானத்தில் பிரகாசிக்கும் சந்திரன் தன்னிடமுள்ள களங்கமாகிய இருளைப் போக்கிக்கொள்ள எண்ணாமல்; ஆகாயத்திலே நிலை பெற்று, உலகத்தின் நிறைந்த இருளைப் போக்கும். மேலோர் தமக்குள்ள குறைகளைத் (துன்பங்களை) தீர்த்துக்கொள்ள எண்ணாமல், மற்றவர்களுக்கு உண்டாகும் கொடிய குறைகளுக்காக மனமிரங்கி, அவற்றை நீக்குவர்.

குறிப்பு:—வெங்குறை-கொடியகுறை, விழுமியோர் - மேலோர், திங்கள் - சந்திரன், கறை இருளை - களங்கமாகிய இருளை, தீர்வுள்ளார் = தீர்வு + உள்ளார்.

## வினாக்கள்

1. திங்கள் என்பதற்கு இன்னொரு பெயரென்ன?
2. சந்திரனில் உள்ள கறுப்பிற்கு வான சாஸ்திரம் கூறுகிற காரணம் என்ன?
3. மதி எங்கிருந்து உலகிற்கு உதவி செய்கிறது? அஃது என்ன உதவி?
4. விழுமியோர் என்ன செய்வர்?
5. 'தனக்கு மிஞ்சினால் தருமம்' என்பதன் கருத்திற்கும் இதற்கும் உள்ள வேற்றுமை என்ன?
6. நமக்கு நிழலைத் தரும் மரத்திற்கும் விழுமியோருக்கும் உள்ள ஒற்றுமையை நான்கு வரியில் எழுது.
7. கறை, கரை; நிறை, நிரை—இவற்றிற்குத் தனித்தனியே பொருள் வேறுபாட்டைக் குறிப்பிடு.

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
வழியிலார்க் கேது விளக்கு. 6

## பொழிப்பு

நற்குண நற்செய்கைகளை உடையவளே, பேச முடியாத ஊமைகளுக்குப் பழைய நூல்களின் பொருள் என்ன பயனைத் தரும்? கண் பார்வையில்லாத குருடர்க்கு விளக்கொளி யாது நலனைக் கொடுக்கும்? உயிர்களிடம் அன்பில்லாதவனுக்கு அழகிய இடமும், மிக்க பொருளும், கீழ்ப்படிந்த பணியாளரும், இன்னும் வேறு பலவும் இருந்தும் அவனுக்கு என்ன பயனைச்செய்யும்? (ஒரு நன்மையும் ஏற்படாது.)

அவற்றைக்கொண்டு அவன் அறத்தையும் புகழையும் தேடிக்கொள்ளமாட்டான்.

குறிப்பு :—மொழியிலார்க்கு - பேச்சில்லாதவராகிய ஊமைகளுக்கு, முது நூல் - பழமையாகிய நூல், மற்று - அசை.

## வினாக்கள்

1. ‘அவற்கு’—எவற்கு? ‘என் செய்யும்?’—எவை?
2. உள்ள பொருள்களால் நாம் பயனடைய வேண்டுமாயின், நமக்கு என்ன வேண்டும்?
3. தீபத்திற்கு விளக்கு எனப் பெயரமைந்ததற்குக் காரணம் என்ன? இஃது என்ன பெயர்?
4. முதுநூல் யாருக்குப் பயன் அளிக்கும்?
5. விளக்குப் பயன்படுவது யாருக்கு?

தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதிப்பார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். 7

பொழிப்பு

பரந்த கடலானது தன்னைச்சார்ந்த சிறிய உப்பங்கழியினும் சென்று பாயாதோ? (தானே பாயும். அதுபோலக்) கல்வி அறிவில் மேம்பட்டோர், தம்மைக்காட்டிலும் தம்மைச் சார்ந்தோர் தாழ்ந்தவராயிருப்பினும், தம் பெருமையையும், தம் தலைமையையும் நோக்கித் தம்மைப் பெருமிதத்தோடு நினையாமல், அவர்கள் இடத்திற்குச் சென்று, அவர்கள் துன்பங்களை நீக்குவர்.

குறிப்பு:—அல்கு கழியினும்-குறுகிய உப்பங்கழியிலும்.

விஞக்கள்

1. உயர்ந்தோர் என்ன செய்யார்? என்ன செய்வார்?
2. தன்னை அடைந்த கழிக்குக் கடல் செய்யும் உதவி என்ன?
3. எவற்றில் உயர்ந்தவரை, உயர்ந்தவர் எனச் சான்றோர் கூறுவர்?
4. சென்னையிலுள்ள உப்பங்கழியின் பெயரென்ன?
5. கடலினால் உண்டாகும் பயன்கள் யாவை?
6. இங்குக் கடல் யாருக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது?
7. கடல் சிறப்புப் பெயரா, பொதுப் பெயரா?

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். 8

பொழிப்பு

பொன்னாற் செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களை அணிந்தவளே, அலைகளோடும் கூடிய கடல் குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன் வருகையால் மகிழ்வுடன் பொங்குமேயன்றி, அனல் வீசும் கிரணங்களையுடைய

சூரியன் வருகையால் பொங்குவதில்லை. (அது போலப்) பெரிய கடல்சூழ்ந்த விசாலமான உலகத்தார் இனிமையான சொல்லால் அல்லாமல் கடுமையான சொல்லால் மகிழார்.

குறிப்பு :—இரு நீர் வியன் உலகம் - பெரிய கடல் சூழ்ந்த பரந்த உலகம், வன்சொல் - கடுஞ்சொல், அதிர் வளையாய் - ஒலிக்கின்ற வளையல்களை உடையவளே, அழல் கதிரால் - வெம்மை பொருந்திய கிரணங்களையுடைய சூரியன் வருகையினாலேயே, தண் கதிர் - சந்திரன்.

## வினாக்கள்

1. பெண்ணை முன்னிலையாக வைத்துக் கூறுதற்கு மகடூஉ முன்னிலை என்றும், புருஷனை முன்னிலையாக வைத்துக் கூறுதற்கு ஆடூஉ முன்னிலை என்றும் பெயர் வழங்கும். அப்படியானால், இப்பாட்டிலுள்ளது என்ன முன்னிலை ?
2. பெண் இங்கு எப்படிச் சிறப்பிக்கப்பட்டிருக்கிறாள் ?
3. கடல் எப்போது மிகுந்த அலைகளை வீசும் ?
4. தண்கதிர், அழற்கதிர் — இவைகள் எவற்றைக் குறிக்கின்றன ?
5. இவை இரண்டிற்கும் வேறு பெயர்கள் கூறு.
6. இச்செய்யுளிலுள்ள உவமான உவமேயங்களைத் தனித் தனியே எடுத்துக் காட்டு.
7. உலகம் எதை விரும்பும் ?
8. 'தண்கதிர்' என்பதை வாக்கியத்தில் அமைத்தெழுது.

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. 9

பொழிப்பு

இனிய மாமரம் தென்றற்காற்று வீசுவதால் அழகிய இளந்தளிர்களைக் காட்டிச் சிறப்புறும். கொடிய சுழல் காற்றிலோ, மிகத் துன்புறும். (அதுபோல) கல்வியறிவில் வல்லவர், நல்லவர் வருகையினால் முகமலர்ந்து இன்புறுவர்; கொடியவர் வருகையினாலோ, மனம் வருந்தித் துன்புறுவர்.

குறிப்பு :—அழுங்குவார் - துன்பத்தை அடைவார், வல்லோர் - (கல்வியறிவில்) வல்லவர், தேமா - இனிய மாமரம்.

வினாக்கள்

1. யார் நல்லோர் வரவை எதிர் பார்ப்பார்?
2. நல்லோர் வரவு அவர்க்கு எவற்றை உண்டாக்கும்?
3. ‘அழுங்குவார்’—ஏன்?
4. தேமாவிற்குத் துன்பமும் இன்பமும் உண்டாவது எப்போது?
5. மாமரத்தின் தளிர் என்ன நிறமாய் இருக்கும்?
6. மரத்திற்கு எத்தனை பகுதிகள் உண்டு?
7. அது காற்றை எதன் மூலமாக உட்கொள்ளுகிறது?
8. தென்றல், சுழல்காற்று இவை யார் யாருக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றன?
9. எப்பக்கத்திலிருந்து வரும் காற்றிற்குத் தென்றல் என்பது பெயர்?
10. எப்பக்கத்திலிருந்து வரும் காற்று மிகக் கெட்டது?

ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு. 10

பொழிப்பு

நஞ்சுடைய பாம்பினிடமுண்டாகும் பெரிய மாணிக்கத்தைக் கண்டு வெறுத்து நீக்குபவருமில்லை; பாற்கடலில்



மறைமலையடிகள் நூல் நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
72000

உண்டாகும் விஷத்தைக் கொள்பவருமில்லை. ஆதலின் மேலாகக் கொள்ளுகின்ற உயர்வையும், தாழ்வாகக் கொள்ளுகின்ற இழிவையும் நற்குணங்களை உண்டாக்குகின்ற கல்வி அறிவினால் அல்லது பிறப்பினாலே விரும்பாதிருப்பீராக.

குறிப்பு:—அரவு - பாம்பு, மணி - இரத்தினம், கடு - நஞ்சு.

வினாக்கள்

1. எதை வேண்டுதல் கூடாது ?
2. உண்மையாக ஒருவருக்கு உயர்வைத் தருவது எது ?
3. நாகம் எத்தகைய பிராணி ?
4. நாகத்தினிடம் உண்டாகும் உயர்ந்த பொருள் எது ? அதன் திறம் என்ன ?
5. கடலில் நஞ்சுண்டானது எப்போது ? அதை ஏற்றுக்கொண்டவர் யார் ?
6. கடலில் என்னென்ன கிடைக்கும் ?
7. இச்செய்யுளினால் நீ தெரிந்துகொள்வதென்ன ?
8. கடு என்பதற்கு வேறு சொற்கள் இரண்டு கூறு.

கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கண்
மற்றையர்தா மென்று மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். 11

பொழிப்பு

வெற்றியையுடைய நீண்ட வேலும் விரும்புகின்ற ஒளி பொருந்திய கண்களையுடையவளே, இனிய சுவையை உடைய வாழைப்பழத்தை இனிப்பாகிய பாலே விரும்பும். அதைப் புளித்த காடி நீர் விரும்பாது. (அது போல) நூல்

கற்று ஞானம் பெற்றவரைச் சான்றோரே விரும்புவர். கீழோரோ, அவரை எப்போதும் மதிக்க மாட்டார்.

குறிப்பு:—காமுறுவர் - விரும்புவர், வாள் விழியாய் - ஒளி பொருந்திய கண்களை உடையவளே, புளிங்காடி - புளிப்பாகிய காடி நீர்.

### வினாக்கள்

1. இப்பாட்டிலுள்ள முன்னிலை என்ன முன்னிலை? இம்முன்னிலைக்குக் கொடுத்துள்ள அடைமொழிகள் எவை?
2. 'மற்றையர்' என்பவர் யார்?
3. 'மேன்மக்கள் காமுறுவர்.'—யாரை? ஏன்?
4. புளிங்காடி என்பது என்ன?
5. கற்று என்பதற்கு முதல் நிலை அல்லது பகுதி கல். வெற்றி என்பதற்குப் பகுதி என்ன?
6. இச்செய்யுளில் ஈறு கெட்ட சொல் எது?
7. வேலின் படம் வரைந்து காட்டு. ஏன் வேல் பெண்களின் கண்களுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது?

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். 12

### பொழிப்பு

எக்காலத்திலும் மனிதர் நீரை நெற்பயிருக்கே பாய்ச்சுவதல்லாமல் காட்டில் உலரும் புல்லுக்குப் போய்ப் பாய்ச்சுவரோ? (பாய்ச்சுவதில்லை. அதுபோலத்) தகுதியுடையவர்க்கே பொருள் முதலியவற்றைக் கொடுப்பதன்றித் தகுதியற்றவர்க்கு ஒருவரும் ஈயார் என நினைத்துச் சான்றோர் நல்வழியை மீறி (கடந்து) நடப்பவர்க்கு ஒரு காலும் கொடார்.

குறிப்பு:—விழுமியோர் - மேலோர், காட்டு முளி புல் - காட்டில் உள்ள உலர்ந்த புல்.

வினாக்கள்

1. மிக்கார் என்பவர் யார்?
2. எதற்கு நீர் இறைத்தால் மிக்க பயனை அடையலாம்?
3. காட்டு முளி புல் எப்படி வளர்கிறது?
4. மலர் தன் தேனையும், மகரந்தத்தையும் தக்க முறையில் பயன் படுத்தாத எறும்புகள் தன்னுள் புகுந்து அவற்றைக் கொள்ளாவாறு தன் அகவிதழ் புறவிதழ்க் கதவுகளினால் காத்துக்கொண்டிருக்கின்றது. அவற்றைக் கொண்டு போய் மற்ற மலர்களில் சேர்த்துத் தன் குடும்பத்தை வளர்க்கும் தேனீ அல்லது பட்டாம்பூச்சி வரின், உடனே இதழ்களைத் திறந்து அவற்றை உள் விடுகின்றது. இவ் விஷயத்திற்கும், உங்கள் செய்யுளுக்கும் உள்ள சம்பந்தம் என்ன?

நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மையாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம். 13

பொழிப்பு

நற்குணம் நிறைந்த பெண்ணே, செவி கொடுப்பாயாக! காயானது, பருவம் வந்து முற்றினால், தின்பதற்கேற்ற இனிய பழமாகும். இளந்தளிர், நாள் சென்று முதிருமாயின், காய்ந்து உதிர்ந்து போவதன்றி, என்ன பயனைத் தரும்? (அது போல) அறிவு வாய்ந்த நல்லவர் செய்கின்ற சிநேகம், தினந்தோறும் நன்மையைத் தந்து வளரும். அவரல்லாத தீயோர் செய்யும் நட்பு நன்மையைத் தராது நாடோறும் குறையும்.

குறிப்பு:—கேண்மை - நட்பு, காய் + முற்றின் + தின் + தீம் + கனி + ஆம் = காய் முற்றிற் றின்றீங் கனியாம்.

வினாக்கள்

1. யாருடன் செய்த நட்பு வளரும்?

2. ‘ அல்லார் செயுங் கேண்மை யாகாதே ’—எதைப்போல ?
3. மரம் எந்தக் காலத்தில் தளிர் விடும் ?
4. கேண்மை எந்த வேற்றுமை ? இதில் மூன்றும் வேற்று உருபை ஏற்றி, இதை வாக்கியத்தில் அமைத்துக்காட்டு.
5. வளர் சந்திரனுக்கும், நட்பிற்கும் உள்ள சம்பந்தம் என்ன ?

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண். 14

பொழிப்பு

இலக்குமியைப் போன்ற அழகிய பெண்ணே, பிரகாசிக்கும் ஆபரணங்களை அணியும் கை காது முதலிய உறுப்புகள் அவ்வணிகளை அணிந்துகொள்ளாத கண்ணுக்கு ஒப்பாகுமோ ? ஒப்பாகா. (அவற்றைப் போல) உயர்ந்த பொன்னைத் தரித்துக்கொள்ளும் அரசர் அதை அணிந்து கொள்ளாத மிக்க கல்வியில் நிலைபெற்ற அறிவுடையோர்க்கு ஒப்பாகமாட்டார்.

குறிப்பு :—புனையா - அணியாத, பூணும் - அணிந்துகொள்ளுகின்ற, தாம், மற்று, காண் - அசைகள்.

வினாக்கள்

1. ‘ புனையா வேந்தர் ’—எதைப் புனையா வேந்தர் ?
2. அறிஞரென யாரை வழங்குகின்றோம் ?
3. ‘ ஒவ்வார் ’ யார் ? எதைப்போல ? இச்செய்யுளில் உள்ள அசைச் சொற்களையும் ஈறு கெட்ட சொற்களையும் குறிப்பிடு.
4. ஆபரணத்தை அணிகின்ற உறுப்புகள் எவை ?
5. கண்ணுக்கு அணிகலம் எது ?
6. பொன்னே என்பதற்குப் பொருள் யாது ?
7. இலக்குமிக்கு வேறு பெயர்கள் என்ன ?
8. இச்செய்யுளுக்கு எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் கூறு.

## 4. நான்மணிக் கடிகை

### (விளம்பி நாகனார்)

*சிறப்பு வாய்ந்த பாண்டி நாட்டில் தமிழ்த்தாய் கொலு வீற்றிருந்த சங்கங்கள் மூன்றின் சிறப்பை யாவரும் அறிவர். அவற்றுள் கடைச்சங்க காலத்தில் வெளி வந்த நூல்கள் பலப்பல. அந்நூல்களில் பெரும்பாலனவே இப்போது நம் தமிழ் நாட்டை அணி செய்வன. அவைகளுள்* **இந்நான்மணிக் கடிகை** *பதினென்கீழ்க்கணக்கைச் சார்ந்தது.*

### பதினெண் கீழ்க்கணக்கு

| | |
|---|---|
| (1) *நாலடியார்* | (10) *திணைமாலை நூற்றைம்பது* |
| (2) *நான்மணிக் கடிகை* | (11) *திருக்குறள்* |
| (3) *இன்னா நாற்பது* | (12) *திரிகடுகம்* |
| (4) *இனியவை நாற்பது* | (13) *ஆசாரக் கோவை* |
| (5) *கார் நாற்பது* | (14) *பழமொழி* |
| (6) *களவழி நாற்பது* | (15) *சிறு பஞ்ச மூலம்* |
| (7) *ஐந்திணை ஐம்பது* | (16) *இன்னிலை* |
| (8) *திணைமொழி ஐம்பது* | (17) *முதுமொழிக் காஞ்சி* |
| (9) *ஐந்திணை எழுபது* | (18) *ஏலாதி* |

*என்பவை.*

*நான்மணிக்கடிகை என்னும் இந்நூல் விளம்பி நாகனார் என்ற தமிழ்ப்புலவரால் இயற்றப்பட்டது. இவர் ஒரு நல்லிசைப் புலவர். இவர் தோன்றிய ஊர்* **விளம்பி** *என்பது. இவர் இயற்பெயர்* **நாகனார்** *என்பது. இவ்விரு பெயரும் சேர்ந்து இவருக்கு விளம்பி நாகனார் என்னும் பெயர் அமைந்தது என்பது சிலர் கருத்து.*

இவர் செய்த காப்புச்செய்யுட்கள் இரண்டிலும் திருமாலின் சீர்மைகளையே சிறப்பித்துள்ளாராதலின், இவர் வைணவரெனக் கூற வேண்டி இருக்கிறது. இவர் காலம் கடைச்சங்க காலமென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வாசிரியரைப் பற்றி இதற்குமேல் ஒன்றும் தெரியவில்லை.

நான்மணிக்கடிகை என்னும் இத்தொடர் நான்கு இரத்தினத் துண்டுகள் எனப் பொருள் படும். அறிவை அழகு படுத்துகின்ற அணிகளில் இஃதும் ஒன்று. கடவுள் வாழ்த்துடன் நூற்று நான்கு வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. ஆனால், பல வகை வெண்பாக்களும் சேர்ந்து இந்நூலை அழகு படுத்துகின்றன.

இளைஞர்க்கேற்ற நீதிகள் பல இந்நூலில் உண்டு. ஒவ்வொரு பாட்டிலும் இயன்ற வரை பொருத்தமான நான்கு பொருள்களே அமைக்கப்பட்டுள்ளன. மாணவர் இவற்றுள் சில செய்யுட்களை மனப்பாடஞ் செய்வரேல், அவர் மனத்தில் நீதிகள் பல பதியும். எளிதில் பொருள் அறியக் கூடிய சொற்களாலேயே இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இதனாலேதான் ஒவ்வொருவர் இயற்றும் பாட புத்தகங்களிலும் இச்செய்யுட்கள் இடம் பெறுகின்றன.

நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில். 1

பொழிப்பு

ஓரிடத்தில் மலரிருப்பதை அதன் நல்ல மணமே தெரிவிக்கும். ஒருவரது காரியத்திறமையை அவர் பேசும் சொற்களே தெரிவிக்கும். ஆராய்ந்து பார்க்கின், ஒருவர் மனத்

தில் மறைந்து கிடக்கும் தீமைகளை அவர் மனமே அவருக்கு அறிவிக்கும். ஒருவர் மனக்குறிப்பை முகத்தைப்போல முற்பட அறிவிப்பது வேறொன்றுமில்லை.

குறிப்பு:—வினை நலம் - ஒருவனது செய்கைத்திறம், தூக்கின்- ஆராய்ந்தால், அகம் - நெஞ்சம்.

வினாக்கள்

1. நாம் ஏன் மலரை விரும்புகிறோம்?
2. மலரின் புறவிதழால் பயன் என்ன?
3. 'நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை'—இச்சொற்றொடரின் கருத்திற்கு, இப்பாட்டின் எந்த அடி ஒப்பாகும்?
4. ஒருவர் வார்த்தையினால் நாம் எதை அறியலாம்?
5. தூக்கின்—இதை வாக்கியத்தில் அமைத்தெழுது.
6. இந்நூலாசிரியர் யார்? அவர் ஊரெது?

சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத வில்லை வலிகளும்—மூவா(து)
இளமை யிசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில். 2

போழிப்பு

இவ்வுலகத்தில் தோன்றிய உயிர்கள் எல்லாவற்றுள்ளும் இறவாதன இல்லை. எப்பேர்ப்பட்ட வன்மைகளுள்ளும் கெடாதன இல்லை. முதுமையை அடையாமல் எப்போதும் இளமையையே பொருந்தியவருமில்லை. வளந்தரு செல்வத்தில் குறைவின்றி என்றும் பொருள் பெற்று வாழ்ந்தாருமில்லை.

குறிப்பு:—தாவாத இல்லை - கெடாதன இல்லை, மூவாது - முதுமை அடையாமல், வளமை - செல்வம்.

## வினாக்கள்

1. உயிர்களின் தொழில்கள் எவை?
2. இளமை எப்படிப்பட்டது?
3. வலிமை எப்போது கெடும்?
4. 'குன்றத்தனை இருநிதியைப் படைத்தோர் அன்றைப் பகலே யழியினு மழிவர்'—இதன் கருத்துள்ள அடியைக் குறிப்பிடு.
5. இச்செய்யுளினால் நீ தெரிந்துகொள்வதென்ன?
6. இந்நூலில் எத்தனை பாக்கள் உள்ளன? அவை என்ன பாக்கள்?

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர். 3

## பொழிப்பு

நற்குண நற்செய்கைகளை உடையவர்க்கும், நன்மை தரும் நல்வழியில் நடப்பவர்க்கும், சான்றோரல்லாத கீழ் மக்கட்கும், தம் கையில் மிக்க பொருளுடையவர்க்கும் சொந்த ஊரென்று ஓர் ஊர் வேண்டுவதில்லை. எவ்வூரும் அவர்களுடைய ஊரேயாகும்.

குறிப்பு :—கடைகட்கும் - கீழ் மக்களுக்கும், தம் கைத்து - தமது கையில் உள்ளது.

## வினாக்கள்

1. 'நன்னெறிச் செல்வார்க்கு' எல்லா ஊரும் தம்மூராதல் எவ்வாறு?
2. இந்நூலாசிரியர் மதத்தை உதாரணத்துடன் குறிப்பிடு.

3. பணம் என்ன நன்மைகளைத் தரும்?
4. அல்லாக் கடைகள் யார்?
5. 'எவ்வூரும்'—இதைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறு.
6. உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் இச்செய்யுளிலிருந்து இரண்டிரண்டு உதாரணங்கள் கூறு.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம் குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 4

## பொழிப்பு

இளமையில் கல்வி கற்காமல் காலங் கழித்தல் பிழையாகும். பொருளில்லாத போது வரையாது கொடுக்கும் ஈகைக்குணம் வாய்ந்திருத்தல் குற்றமாகும். நெருங்கிய சுற்றத்தினர் உதவி இல்லாத சமயத்தில் பிறரிடம் கோபங் கொள்ளல் தவறாகும். உள்ளன்பில்லாதவரிடத்தில் உண்பது பெரும்பிழையாகும்.

குறிப்பு :—வள்ளன்மை - ஈகைத்தன்மை, தமர் அல்லார் - தமக்கு உள்ளன்பர் அல்லாதார், ஊண் - உண்ணுதல், வளம்இலா - பொருள் வருவாய் இல்லாத.

## வினாக்கள்

1. நாம் ஏன் இளமையிலேயே கற்க வேண்டும்?
2. வள்ளன்மை என்பது என்ன?
3. நம் நாட்டிலிருந்த வள்ளல்களுள் இருவரைக் கூறு.
4. நான்மணிக் கடிகை என்பதன் பொருள் என்ன?
5. யாரிடத்தில் உணவு உண்ண வேண்டும்?
6. உறவினருக்குக் கிளைஞர் என்னும் பெயர் ஏன் வந்தது?
7. குற்றம், கூற்றம்—இவற்றின் பொருள் வேறுபாடு என்ன?

எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை. 5

பொழிப்பு

(யாகம் முதலியன செய்யும்) எந்த இடத்திலும் உயிர்களைக் கொல்லுதல் குற்றமாகும். தம் இளஞ்சிறுவர் சிறுமிகளைக் கல்வி கல்லாமல் வளர விடுதல் பழிப்பாகும். நாண வேண்டியவைகளுக்கு நாணமின்றி நிற்கும் பெண்களின் அழகு குற்றப்படுவதாகும். குலத்திற்கேற்ற நல்லொழுக்கங்கள் அழிந்த போது தான் தோன்றிய குலமே பழுதுபடுவதாகும்.

குறிப்பு:—விடல் + தீது - விடறீது.

வினாக்கள்

1. எக்கொலையினால் மக்கள் தண்டனை அடைகிறார்கள்?
2. மக்கள் கல்லாமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் கூறு.
3. 'நல்லார்' என்பவர் யார்?
4. குலம் நன்மை அடைதற்குச் செய்ய வேண்டுவன யாவை?
5. எதனால் பெண்களுக்கு அழகுண்டாகிறது?
6. இந்நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் சொல்லப்பட்ட விஷயங்கள் எத்தனை?
7. பொதுப்பெயர் சிறப்புப்பெயர் இரண்டிற்கும் ஒவ்வோர் உதாரணம் கூறு.

வைததனா லாகும் வசையே வணக்கமது
செய்ததனா லாகுஞ் செழுங்கிளை—செய்த
பொருளினா லாகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளினா லாகு மறம். 6

## பொழிப்பு

ஒருவன் தான் பிறரைப் பழித்துப் பேசுவதால் அவனுக்கு வசை உண்டாகும் ; எல்லாரிடத்தும் வணக்கத்துடன் நடந்துகொள்வதனுல் மிகுந்த சுற்றம்சேரும் ; தான் தேடிய மிக்க பொருளினுல் சிறந்த இன்பம் உண்டாகும் ; கனிந்த இரக்கத்தினுல் தருமச் செய்கை ஏற்படும்.

குறிப்பு :—வசை - நிந்தனை (பழி), செழுங்கிளை - மிக்க உறவு, போகம் - இன்ப வாழ்க்கை, நெகிழ்ந்த - உருகிய.

## வினுக்கள்

1. ஒருவர் வசையில்லாமல் வாழ்வது எப்போது ?
2. வணக்கத்தை உடையவன் எதை அடைகிருன் ?
3. கிளை என்று வேறெதற்குச் சொல்லுகின்ருேம் ?
4. அறத்திற்குக் காரணம் எது ?
5. அருளுடையவரின் கொள்கை என்ன ?
6. இவ்வுலக இன்பம் எதில் அடங்கியிருக்கிறது ?
7. செழுங்கிளை—இதை வாக்கியத்தில் அமைத்தெழுது.

## 5. விவேக சிந்தாமணி

(பல புலவர்கள்)

*தண்டா மரையி னுடன் பிறந்துந்*
*தண்டே னுகரா மண்டுகம்*
*வண்டே கானத் திடையிருந்து*
*வந்தே கமல மதுவுண் ணும்*
*பண்டே பழகி யிருந்தாலும்*
*அறியார் புல்லோர் நல்லோரைக்*
*கண்டே களித்தங் குறவாடித்*
*தம்மிற் கலப்பர் கற்றோரே.* 1

பொழிப்பு

*தவளை, குளிர்ந்த தாமரையுடனே நீரில் பிறந்தாலும், அத்தாமரையிலிருக்கும் இனிய தேனை உண்ண அறியாது. வண்டோ, காட்டிலிருந்து வந்து அக்கமலத்தின் தேனை உண்டு களிக்கும். கீழோர் சான்றோருடன் அநேக நாட்கள் பழகியிருப்பினும், அம்மேலோர் பெருமையை உணர்ந்துகொள்ளார். கற்றவரோ, அம்மேலோரைக் கண்டு மகிழ்ந்து, அவருடன் கலந்து உறவாடுவர்.*

குறிப்பு :—*தண் + தாமரை = தண்டாமரை, தண் + தேன் = தண்டேன், மண்டுகம் - தவளை, மது - தேன், புல்லோர் - அற்பர்.*

வினாக்கள்

1. *மண்டுகத்திற்கும், வண்டிற்கும் பிறப்பிடங்கள் எவை?*
2. *இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?*
3. *வண்டிற்குக் கால்கள் எத்தனை?*

4. புல்லோர், கற்றோர் இவர்களின் செய்கைகள் யாவை ?
5. கற்றோர் நல்லோரைக் கண்டவுடன் என்ன செய்கின்றனர் ?

வானர மழைதனி னனையத் தூக்கணந்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடர தாகுமே. 2

பொழிப்பு

முன்னரே தன் முயற்சியினால் கூடு கட்டி மழையில் ஒரு சிறு துன்பமுமின்றி வசித்துக்கொண்டிருந்த தூக்கணங்குருவி ஒன்று, தன் காலத்தை வீணாகக் கழித்து இருப்பதற்கு இடமின்றி மழையில் துன்பப்பட்டுக்கொண்டிருந்த ஒரு வானரத்தைப் பார்த்து, "முன்னமே நீயும் என்னைப்போல ஒரு கூடு கட்டிக்கொண்டிருந்தால், சுகமாக இருக்கலாமே!" என்று சொன்னது. இவ்வார்த்தை வானரத்தின் செவியிற் பட்டவுடன் வானரத்திற்குக் கோபம் பொங்கியது. அது உடனே குருவியின் கூட்டைப் பிய்த்து எறிந்துவிட்டு, அக்குருவியையும் மழையில் நனையச் செய்தது. (அதுபோல) உயர் கல்வி, சிறந்த ஞானம், நூல்களின் உண்மை முதலியவற்றை அறிவற்ற மூடருக்குக் கூறினால், துன்பமே உண்டாகும்.

குறிப்பு:—வானரம் - குரங்கு.

வினாக்கள்

1. வானரத்திற்கு வேறு பெயரென்ன ?
2. வானரம் ஏன் மழையில் நனைந்தது ?
3. தூக்கணங்குருவியின் கூட்டைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?

4. ஈனருக்கு எஃது ஒப்பிடப்பட்டிருக்கிறது ?
5. அறிவுடையோருக்கு என்னென்ன அமைந்திருக்கும் ?
6. தூக்கணத்திற்கு வந்த இடரென்ன ?
7. 'இடர்'—இதை வாக்கியத்தில் அமைத்தெழுது.

பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே வொளிம ழுங்கிடும்
மருத்துள தோவெனில் வாக டத்திலை
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே. 3

## பொழிப்பு

ஒருவனுக்கு மிக்க செல்வச் செருக்கென்னும் நோய் வந்து சேருமாயின், பொருள்களின் உருத்தெரியாமலே, கண் பார்வை மழுங்கிவிடும். அதற்கு மருந்து உண்டோ என்னில், அதற்கேற்ற மருந்து மருத்துவ நூலில் இல்லை. வறுமை என்னும் ஒரு மருந்தினலேயே அந்நோய் நீங்க வேண்டும்.

குறிப்பு :—வாகடம் - மருத்துவ நூல்.

## வினக்கள்

1. செல்வம் இங்கு என்னவெனக் கூறப்பட்டுள்ளது ?
2. அப்பிணி செய்யும் கெடுதி யாது ?
3. வாகடம் என்பது என்ன நூல் ?
4. செல்வப் பிணிக்கு மருந்து யாது ?
5. 'பணமிருந்தால் பத்து வகையுஞ் செய்யலாம்; பணமில்லாதவன் பிணம்'—இவற்றிற்கும், இச்செய்யுளுக்கும் உள்ள வேற்றுமை என்ன ?
6. எத்தகையோருக்கு உண்டாகும் செல்வம் பிணியாக மாறுகின்றது ?

புத்திமான் பலவா ஞவான் பலமுளான் புத்தி யற்ருல்
எத்தனை விதத்தி ஞலு மிடரது வந்தே தீரும்
மற்ெருரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றிற் சாயல் காட்டிய வுவமை போலாம்.

பொழிப்பு

ஒரு முயல் ஒரு சிங்கத்தை அழைத்துச் சென்று அங்குள்ள ஒரு கிணற்றில் அதன் உருவச் சாயலைக் காட்டிக் கொன்ற கதை போல, ஒருவன் எவ்வளவு வன்மையும் வீரமும் உடையவனுய் இருப்பினும், அறிவற்றவனுயின் அவனுக்குத் துன்பமே வந்து சேரும்.

ஆதலால், மிக்க அறிவுடையவனே வீரமுடையவனுய்த் துன்பத்தை அனுபவியான்.

விஞக்கள்

1. எவன் பலவான் ஆவான்?
2. துஷ்டன் பலமுள்ளவனுப் இருந்தால், பிறர்க்கு நேரிடும் கெடுதிகள் யாவை?
3. இச்செய்யுளிலுள்ள கதையைச் சுருக்கிச் சொல்லு.
4. முயல் சிங்கத்தை எதனுல் வென்றது?

## 6. தனிப் பாடல்கள்

(பல புலவர்கள்)

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வாரொன்று பூங்குழலா ராய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

### பொழிப்பு

(தண்ணீரே) நீ ஆகாயத்திலிருக்கும்போது மேகம் என்று பேர் பெற்றனை; பெரிய பூமியில் வந்த பின்பு தண்ணீர் என்று பேர் பெற்றனை; நீட்சி பொருந்திய அழகிய கூந்தலையுடைய இடைப் பெண்டிர் கையில் வந்த பிறகு மோர் என்று பேர் பெற்றனை. இங்ஙனம் மூன்றிடங்களிலும் மூன்று பேர்களைப் பெற்றனையே! (உன்னைவிடச் சிறந்தோர் யார்?)

குறிப்பு :—கார் - மேகம், ககனம் - ஆகாயம்.

### வினாக்கள்

1. கார் எந்த நிறம் உடையது? கார் எப்படி நீராக மாறுகிறது?
2. இடைச்சியர் தொழிலென்ன?
3. எது மோரென்று பேர் பெற்றது? ஏன்?
4. மோரின் குணமென்ன?
5. ககனம், கார் இவற்றை வாக்கியத்தில் அமைத்தெழுது.

வாரணங்க ளெட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னாலடித்த
புண்வாயி லீமொய்த்த போது. 2

பொழிப்பு

ஆயர் பாடியில் கண்ணனாக வந்து அவதரித்த ஸ்ரீமந் நாராயணனை இசை போலும் இனிய சொற்களையுடைய யசோதைப் பிராட்டி கயிற்றினால் அடித்த புண்ணின் வாயில் ஈ மொய்த்தபோது (அவன் அருவருப்புக் கொண்டு அசைந்ததனால்) எட்டுத்திக்கு யானைகளும், மகமேரு மலையும், ஏழு கடல்களும், உலகமும் ஆகிய எல்லாப் பொருள்களும் அசைந்தன.

குறிப்பு :—வாரணம் - யானை, பண் - இசை, பருமம் - கயிறு தாரணி - பூமி.

வினாக்கள்

1. 'சலித்தன' எவை? ஏன்?
2. வாரணம்-இதற்கு வேறு இரண்டு பெயர்கள் கூறு.
3. மகமேருவுக்கு இப்போது என்ன பெயர் வழங்குகின்றது?
4. நாரணனை வழிபடு கடவுளாகத் தொழுகின்றவர் யார்?
5. இரண்டு பெயர்ச்சொற்களை எடுத்துக் காட்டு.
6. **பண்** என்பதை வாக்கியத்தில் அமைத் தெழுது.
7. ஈக்குக் கால்கள் எத்தனை?

விரக ரிருவர் புகழ்ந்திடவும் வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்-அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று. 3

பொழிப்பு

அறிவுடையோர் இருவர் புகழ வேண்டும்; விரல் நிறைய அழகிய மோதிரங்கள் அணிந்திருத்தல் வேண்டும்: இடையில் வேலைப்பாடமைந்த நூலாடையையேனும், விலை உயர்ந்த பட்டாடையையேனும் அணிந்திருத்தல்

வேண்டும். அத்தகையோர் பாடும் பாடல் துன்பத்தைத் தருகின்ற விஷமாயினும், இனிமையற்ற வேம்பாயினும், மிகவும் நல்லது.

குறிப்பு:—விரகர்-விவேகிகள் (அறிவுடையார்), அரை-இடுப்பு, நன்று-நன்மையுடையது.

விஞக்கள்

1. விரகர் புகழ வேண்டும்-எவரை ?
2. நஞ்சு, வேம்பு இவற்றின் குணங்கள் யாவை ?
3. பஞ்சு, பட்டு இவை எங்கிருந்து கிடைக்கின்றன ?
4. கவி பாடும் புலவர் இருவரைக் குறிப்பிடு.

எட்டேகால் லட்சணமே யேமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்ன யது. 4

பொழிப்பு

அவலட்சணமே, எமன் ஏறுகின்ற வாகனமாகும் எருமைக் கடாவே, மூதேவியின் வாகனமாகிய கழுதையே, முற்றும் மேற்கூரையில்லாத குட்டிச்சுவரே, பெருமை வாய்ந்த இராமபிரான் தூதுவனுகிய குரங்கே, நீ கூறியது ஆரைக் கீரையடா.

குறிப்பு:—எட்டேகால் என்பதை அவ என்று தமிழெண்ணுல் எழுதுவர். ஆதலின், இவ்வெழுத்துகளுடன் லட்சணம் என்பதைச் சேர்த்தால், அவலட்சணம் என்று ஆகும்.

விஞக்கள்

1. ‘எட்டேகால் லட்சணம்’ என்பதற்குப் பொருளென்ன ?
2. பெரியம்மை, மக்களுக்கு எதைத் தருவள் ?

3. அனுமான் செய்த சிறந்த காரியம் என்ன?
4. தூதுவன் வேலை யாது?
5. பரிக்கு அடைமொழி எது?

சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார். 5

## பொழிப்பு

அழகாக விளங்குகின்ற பூமாலையை அணிந்த வேல் போன்ற கண்களையுடையவளே, சான்றோர் சொல்லாமலே பிறர்க்கு உபகாரத்தைச் செய்வர்; சிறியர் சொல்லிச் செய்வர்; கீழ்மக்களோ, சொல்லியும் செய்யமாட்டார்கள்: இவற்றிற்குச் சொல்லும் உவமையை ஆராய்ந்து பார்க்க விரும்பினால், இம்மூவருக்கும் முறையே பூவாமல் காய்க்கும் பலா மரத்தையும், பூத்துக் காய்க்கும் மாமரத்தையும், பூத்தும் காய்க்காத பாதிரி மரத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பாயாக.

குறிப்பு:—குலாம் - விளங்குகின்ற, கூறுவமை = கூறு + உவமை - சொல்லத் தகுந்த ஒப்பு, நாடில் - ஆராயின்.

## வினாக்கள்

1. பாதிரி மரத்தை ஒத்தவர் யார்?
2. இப்பாட்டில் உள்ள 'வேற்கண்ணாய்' என்பது என்ன முன்னிலை? இம்முன்னிலைக்குக் கொடுத்துள்ள அடைமொழிகள் யாவை?
3. சிறியவர், கயவர் இவருக்குள்ள வேறுபாடு என்ன?
4. பாதிரிப் பூவைப் பற்றி உனக்கென்ன தெரியும்?

5. இப்பாட்டிலுள்ள பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை எடுத்துக் காட்டு.

இனியது கேட்பின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவினும் நனவினுங் காண்பது தானே. 6

பொழிப்பு

ஒப்பற்ற நீண்ட வேலையுடைய அரசனே, 'இனிமை உடையது யாது?' எனக் கேட்பாயாயின், தனித்திருந்து பொருள்களை ஆராய்தல் மிகுந்த இனிமையுடையது; முதற் கடவுளை வழிபடுதல் அதைக்காட்டிலும் இனிமையுடையது; கல்வி அறிவுடையோரைச் சேர்ந்து வாழ்தல் அதைவிட இனிமையுடையது; அப்பேரறிவு வாய்ந்தவரைத் தூக்கத்திலும் விழிப்பிலும் சேவிப்பது அதைக்காட்டிலும் இனிமையுடையதாகும்.

குறிப்பு:—தனி - ஒப்பற்ற, ஏகாந்தம் - தனிமை, ஆதி - முதற் கடவுள்.

வினாக்கள்

1. இச்செய்யுள் யாரைப் பார்த்துக் கூறப்பட்டது? இதிலுள்ள 'வேலோய்' என்பது என்ன முன்னிலை?
2. பெரியோர் ஏன் தனி இடத்தை நாடுகின்றனர்?
3. கனவிலும், நனவிலும் அறிவுடையோரைக் காணுதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?
4. அறிவுள்ளோர் யாரைக்காட்டிலும் சிறந்தவர்? ஏன்?
5. இச்செய்யுளிலுள்ள பண்புச் சொல்லைக் காட்டு.

அந்தநாள் வந்திலே யருந்தமிழ்ப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே. 7

பொழிப்பு

அரிய தமிழைக்கற்றுக் கவி பாடுவதில் புலமைவாய்ந்த பெரியோரே, யான் அரசனாய்ச் செல்வத்தில் திளைத்திருந்த அக்காலத்தில் நீர் என்னை நாடி வந்தீரில்லை! செல்வத்தை இழந்து துன்புற்றிருக்கின்ற இந்நாளில் வருந்தி வந்து என்னை அடைந்தீர்! (ஆயினும்,) அஞ்ச வேண்டா. என் தலையைக் கொய்துகொண்டு போய் (அதைப் பெற ஆவலுடன் எதிர் நோக்கி இருக்கும்) என் தம்பியின் கையில் கொடுத்து, அதன் விலையாகிய பத்தாயிரம் பொன்னைப் பெற்று, உமக்குள்ள வறுமை நோயைத் தீர்த்துக்கொள்வீராக.

குறிப்பு :—வெறுமை - தரித்திரம்.

வினாக்கள்

1. அந்த நாள்— எந்த நாள் ?
2. அதன் விலை என்ன ?
3. குமணனது சிறந்த குணம் என்ன ? இவன் கல்வி கற்றோன் என்பதற்கு ஓர் உதாரணம் கூறு.
4. முதல், கடை, இடை வள்ளல்களுள் இவன் எவ்வகுப்பைச் சார்ந்தவன் ?
5. குமணன் தம்பியைப் பற்றி உனக்கென்ன தெரியும் ?
6. புலவோய்—பகுதி என்ன ?

## 7. தண்டலையார் சதகம்

(சாந்தலிங்கக் கவிராயர்)

துப்பிட்ட ஆலம்விதை சிறிதெனினும்
பெரிதாகுந் தோற்றம் போலச்
செப்பிட்ட தினையளவு செய்தநன்றி
பனையளவாய்ச் சிறந்து தோன்றும்
கொப்பிட்ட வுமைபாகர் தண்டலையார்
வளநாட்டிற் கொஞ்ச மேனும்
உப்பிட்ட பேர்கடமை யுளவரையும்
நினைக்குமிந்த உலகந் தானே. 1

குறிப்பு:—துப்பு-வலிமை, கொப்பு-பெண்கள் காதணிகளுள் ஒன்று, பேர்கடமை=பேர்கள் + தமை.

### வினாக்கள்

1. தினை, பனை என்பவை எவை?
2. உமை பாகர் யார்?
3. ஆலமரம் எவற்றிற்குப் பயன்படுகிறது?
4. யார் தினையளவு நன்றியைப் பனையளவாக நினைப்பார்?
5. உள வரையும்—யார் உள வரையும்?
6. இப்பாட்டில் உள்ள பண்புச் சொல் எது?
7. இப்பாட்டிலுள்ள பழமொழியைக் குறிப்பிடு.

கொடியருக்கு நல்லபுத்தி சொன்னாலும்
தெரியாது கொடையொன் றில்லா
மடயருக்கு மதுரகவி உரைத்தாலும்
அவர் கொடுக்கமாட்டார் கண்டீர்

படியளக்குந் தண்டலை நீள் நெறியாரே
யுலகமெலாம் பரவி மூடி
விடியல்மட்டு மழைபெயினு மதின்ஓட்டாங்
கிளிஞ்சில்முளை வீசி டாதே. 2

குறிப்பு:—கொடை-தருமம்.

வினாக்கள்

1. "கொடுக்க மாட்டார்" யார்?
2. யாருக்குக் கூறிய நன்மதி பயன்படும்?
3. 'முளை வீசிடாது'—எது? எப்போது?
4. யார் இனிய கவிகளைப் பாடுவர்? கவி பாடுகின்றவர் யாரை யேனும் ஒருவரைக் குறிப்பிடு.
5. கிளிஞ்சில் எங்கே கிடைக்கும்?

நேற்றுள்ளா ரின்றிருக்கை நிச்சயமோ
ஆதலினால் நினைந்த போதே
ஊற்றுள்ள பொருளுதவி யறந்தேடி
வைப்பதறி வுடைமை யன்றோ
கூற்றுள்ள மலையவருந் தண்டலையா
ரேசொன்னேன் குடபால் வீசும்
காற்றுள்ள போதெவருந் தூற்றிக்கொள்
வதுநல்ல கருமந் தானே. 3

குறிப்பு:—குடபால்-மேற்குத்திசை.

வினாக்கள்

1. எஃது அறிவுடைமை? ஏன்?
2. காற்றால் நமக்கு உண்டாகும் பயன் என்ன?
3. காற்று இருப்பதாக எப்படித் தெரிந்துகொள்கிறோம்?

4. குடதிசை என்பது எந்தத் திக்கு? இதற்கு எதிரான திசை எது?

5. இப்பாட்டிலுள்ள பழமொழி யாது?

வைதிடினும் வாழ்த்திடினும் இன்பதுன்பம்
வந்திடினும் வம்பு கோடி
செய்திடினும் தண்டலை நீணெறியார்தஞ்
செயலென்றே தெளிவ தல்லால்
மெய்தர அவர்செய்தார் இவர்செய்தார்
எனநாடி வெறுக்க லாமோ
எய்தவர்த மருகிருக்க அம்மைநொந்த
கருமமென்ன இயம்பு வீரே. 4

குறிப்பு:—தெளிவது-உணர்வது, நீணெறி = நீள் + நெறி.

வினாக்கள்

1. மக்கள் அடையும் இன்ப துன்பங்களுக்குக் காரணர் யார்?
2. எஃது அம்பை நொந்த கருமம் ஆகும்? யாரை நோத வேண்டும்?
3. நாம் நன்மையடைய என்ன செய்ய வேண்டும்?
4. நீணெறி—இச்சொற்றொடரைப் பிரிக்க.
5. வெறுப்பு—இதற்கு எதிர்ப்பதம் என்ன?
6. அம்பை எதில் வைத்து எய்வார்கள்?

விற்பனர்க்கு வாழ்வுவந்தால் மிகவணங்கிக்
கண்ணோட்ட மிகவுஞ் செய்வார்
சொற்பருக்கு வாழ்வுவந்தால் கண்தெரியா
திறுமாந்து துன்பஞ் செய்வார்

பற்பலர்க்கு வாழ்வுதருந் தண்டலையா
ரேசொன்னேன் பண்பில் லாத
அற்பருக்கு வாழ்வுவந்தா லர்த்தராத்
திரிகுடைமே லாகுந் தானே. 5

குறிப்பு:—விற்பனர் - மேலோர், அர்த்த ராத்திரி-இரவு பத்து மணியிலிருந்து இரண்டு மணி வரையிலுள்ள நேரம்.

வினாக்கள்

1. யாருக்கு வாழ்வு உண்டாதல் நல்லது? ஏன்?
2. கொடியோர் வாழ்வு என்ன துன்பங்களை உண்டாக்கும்?
3. குரங்கின் கையில் கொள்ளி கொடுத்தால் என்ன செய்யும்? அதைப் போன்றவர் யாவர்?
4. எதன் பொருட்டுக் குடை பிடிப்பது?
5. தண்டலையாரின் செய்கை என்ன?

கற்றவர்க்குக் கோபமில்லை கடந்தவர்குச்
சாதியில்லை கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்பமில்லை நல்லவருக்
கொருகாலும் நரக மில்லை
கொற்றவருக் கடிமையில்லை தண்டலையார்
மலர்ப்பாதங் கும்பிட் டேத்தப்
பெற்றவர்க்குப்பிறப்பில்லை பிச்சைச்சோற்
றினுக்கில்லை பேச்சுத் தானே. 6

குறிப்பு:—பேச்சு-பெருமை, புகழ்.

வினாக்கள்

1. விருப்பமில்லை, பிறப்பில்லை; யாருக்கு? ஏன்?
2. கோபம் என்னென்ன கொடுமைகளைப் புரியும்?
3. எந்நூல்களைக் கற்றவர் நன்மையடைவர்?
4. பிறப்பு—இதற்கு எதிர்ப்பதம் என்ன?
5. எதற்குப் புகழ் உண்டாவதில்லை?

# III. கதைத் தொகுதி

## 1. தேசிங்கு மன்னன்

### முன் கதைத் தொடர்ச்சி

தெய்வ அருள் வாய்ந்த தேசிங்கு மன்னனுக்கென்றே பிறந்த தெய்வக்குதிரை ஒன்று இவ்வுலகிற்கு வந்தது. அதைக் கோங்கு பக்கிரி என்ற ஒருவன் தன் மாயத்தினால் பிடித்து, டில்லி பாட்சாவிடம் கொடுத்து, பல வெகுமதிகளைப் பெற்றுச் சென்றான். டில்லி பாட்சாவும், அவன் மந்திரிமாரும் அதன்மேல் ஏறி அதை நடத்த முயன்றனர். அஃது அவர்களால் முடியவில்லை. ஆதலால், அந்தக் குதிரையைக் கொட்டகையில் கட்டி நல்ல தீனிகளைக் கொடுக்குமாறு பாட்சா ஏற்பாடு செய்தான். அதற்கு ஆயிரம்பேர் காவலிருந்தனர்.

பின்பு அக்குதிரையின்மேல் ஏறும் வீரமுடையவர் யார் எனத் தன் மந்திரிகளை டில்லி பாட்சா விசாரித்தான். செஞ்சிக் கோட்டை அரசர் தேரணி மகாராஜரே அக் குதிரையை அடக்கி ஏறும் வன்மையுடையார் என மந்திரிகள் கூறினார்கள். அம்மன்னரே தேசிங்கின் தந்தையார். அவரை டில்லிக்கு வருமாறு பாட்சா கடிதமெழுதி யிருந்தான். அக்கடிதத்தைக் கண்டவுடன் அவர் தம் அரசை அமைச்சரிடம் ஒப்புவித்து, தம் மனைவியாரிடம் விடைபெற்றுத் தம் தம்பியாருடன் டில்லி சென்றார். அப்போது இராணியார் பத்து மாதக் கர்ப்பவதியாயிருந்தார்.

மற்றும் பல மன்னரும் டில்லியை அடைந்தனர். அவர்கள் யாவருக்கும் தெய்வலோகத்தின் குதிரையைப் பற்றித் தெரிவிக்கப்பட்டது. "உங்களில் யாரேனும் அந்

தக் குதிரையை ஏறிச்செலுத்தினால், அக்குதிரையை உங்களுக்கே வெகுமதியாகக் கொடுத்துவிடுவேன். இல்லையானால், நீங்கள் சிறையிலிருந்து ஐந்து வருடம் எனக்குக் குற்றேவல் செய்ய வேண்டும்,'' என டில்லி பாட்சா வந்த மன்னருக்குத் தெரிவித்தான். குதிரையைப் பாரா முன்னம் மன்னர் யாவரும் அதற்கு ஒப்புக்கொண்டனர். குதிரையைப் பார்த்தவுடன் மன்னருக்கு அச்சமும் நடுக்கமும் உண்டாயின. அம்முறையில் ஒருவரும் குதிரையின் மேல் ஏற முன் வந்திலர். தேரணி மன்னரும், அவர் சகோதரரும், மற்றவரும் சிறையிலிடப்பட்டனர். இது நிற்க.

தேரணி மன்னர் டில்லிக்குச் சென்ற ஏழாம் நாள் செஞ்சிக் கோட்டையில் இராணியாருக்கு ஆண் பிள்ளை பிறந்தது. அதற்குத் தேசிங்கு என்னும் திருநாமம் சூட்டப்பட்டது.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்,' என்றபடி அம்மைந்தன் இளமையிலேயே மிக்க தீரத்துடன் வளர்ந்து வந்தனன்; ஐந்து வயதிலேயே வேட்டையாடுதல் முதலியவற்றில் அவன் காட்டிய வீரம் சொல்லிலடங்காது. "இவன் வீரமே உருக்கொண்டு தோன்றினனோ!'' எனக் கண்டோர் வியந்தனர். அறிவுடையோர் அவனுக்கு ஆசி கூறினர். "இப்பாலன் வீரனுக்கு வீரனாய் விளங்குவன்,'' எனப் பெரியோர் மங்களம் கூறினர். அச்சிறுவன் கடவுள் பக்தியிலும் கனிந்து நின்றான்.

இளமையிலேயே தந்தையாரின் சிறைவாசமும், தெய்வக்குதிரையின் பெருமையும் அவன் செவிக்கு எட்டின. அவன் இரத்தம் கொதித்தது; உடம்பு துடித்தது. சில வீர வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வந்தன. உடனே அவன் டில்லி சென்று தந்தையரை மீட்கத் தீர்மானித்தான்; அன்னையாரிடமும், அரங்கநாதப் பெருமானிடமும்

விடை பெற்றுத் தன் நண்பனாகிய மோவுத்துக்காரனுடன் டில்லி சென்றான்.

அவன் தான் தெய்வக் குதிரையைச் சவாரி செய்து அடக்க வந்திருப்பதாக டில்லி பாட்சாவுக்குத் தெரிவித்தான். இது பாட்சாவுக்கும் மற்ற அரசர்க்கும் வியப்பைத் தந்தது. "இளைஞனாகிய உன்னால் இக்காரியம் முடியாது. உன் உயிருக்கே கெடுதி நேரும்," எனப் பலபடியாகப் பாட்சாவும், மற்றையோரும் அவனைப் பயமுறுத்தினர். அதற்குத் தேசிங்கு சிறிதும் செவி கொடுத்திலன். தன் தந்தையரை மீட்டுச் செல்வதிலேயே அவன் மனம் ஊன்றி நின்றது. ஆதலால், அவன் அக்குதிரையைத் தனக்குக் காட்டும்படி அவர்களைத் துரிதப்படுத்தினான். அவர்கள் அவனைக் குதிரையினிடம் அழைத்துச் சென்றார்கள்.

### தேசிங்கு ராஜன் குதிரை ஏறுதல்

1. குதிரை யிருக்குங் கொட்டடி தேடிக் குதித்தோடி வந்தான்;
2. ஓடி வருகிற ராஜனைக் கண்டு உதும்பி எழுந்தது பார்!
3. கோட்டை யிடிந்து விழுந்தாற் போல குலுங்கக் கனைத்தது.
4. ஐம்பத் தாறு தேச ராஜாக்கள் அதிர்ந்து விழுந்தார்கள்.
5. 'குழந்தை! குழந்தை!' என்று சொல்லிக் கூவி யழுதார்கள்.
6. டில்லி துரையும் தேரணி ராசனும் திகைத்து விழுந்தார்கள்.
7. கனைத்த குதிரையைக் கண்ணாலே கண்டு கடுக ஓடி வந்தான்.
8. தங்கத்தாலே சேணம் போட்டுத் தடவிக் கொடுத்தானும்.
9. 'அரிக ரிபரந் தாமா!' என்று அலறி எழுந்தானும்.
10. 'கோவிந் தாஸ்ரீ கிருஷ்ணா!' என்று கும்பிட் டெழுந்தானும்.
11. புலிக்குட்டி போலே பாய்ந்தே யவனும் புரவி யேறினானும்.
12. ஏறின உடனே பாரா சாரி என்ன செய்யுது பார்!
13. தடதட வென்று தவிக்குதுபார் அந்தக் குதிரைதானும்;
14. லகானிழுத்துக் கையிலே பிடித்தான் ராஜா தேசிங்கு.

15. 'கோவிந்தா ! கோவிந்தா !' என்று குதிரையைத் தட்டிவிட்டான்.
16. 'அரிகரி ஸ்ரீ முகுந்தா!' என்றே அசுவத்தைத் தட்டிவிட்டான்.
17. தட்டின தட்டில் குதிரை கிளம்பித் தரையில் நில்லாமல்
18. ஆகாய மார்க்கம் வந்து பாயுது அந்த மேகக்குதிரை.
19. கண்கண்ட தூரம் பார்த்து ராஜர்கள் கலங்கி நின்றார்கள்.
20. மேக மண்டல மளாவி வருவதைப் பார்த்தான் தேசிங்கு.
21. லகானை இழுத்துச் சிமிட்டா கொடுத்தான் ராஜா தேசிங்கு.
22. சிமிட்டா கொடுத்த வேகத்தி னாலே சீறிப் பாய்கிறது.
23. கோபம் வந்து மூண்டு கொண்டது ராஜாவுக் கானும்,
24. காடுமலைகள் செடிகளெல்லாம் கலங்கி நடுங்கிடவே
25. தேசத்திலிருக்கும் ஜனங்களெல்லாம் திரண்டு நடுங்குதல் பார் !
26. மேகம் கிளம்பி வாயைப் பிளந்து மின்னல் கக்குது பார் !
27. தேவர்க ளெல்லாம் மனம் பயந்து திகைத்தி ருந்தார்கள்
28. வடக்கே தூரம் மகமேரு சாரல் வந்து பாய்ந்தது.
29. அங்கிருந்தே குதிரையை திருப்பினான் அந்தப் பாலகனும்.
30. தெற்குமை நாகப் பர்வ தத்தைத் தேடி யோடுதுபார் !
31. லங்கையை நான்கு சுற்றாகத்தான் நட் த்திக்கொண்டு வாரான்.
32. பூமியிலுள்ள ஜந்துக்க ளெல்லாம் பொரிக லங்குவபார் !
33. மேற்கே வெகு தூரங் கிளம்பி மேலண்டை கொண்டு வாரான்.
34. ஐந்து நாளு மிராப்பகலாக அதிரக் கொண்டுவாரான்.

குதிரை தேசிங்குராஜனை மோசஞ் செய்ய நினைத்தது.

1. பாரா சாரி மனம்கலங்கிப் பார்த்து நிமிர்ந்தது பார் !
2. 'என்னுயிர் வாங்க இந்தப் பாலன் எங்கே சென்மித்தானோ !
3. இங்கே யிருந்தா லிரண்டு நாழிபி லிறக்க அடிப்பானே !
4. பூமியிலிருந்தால் ஜீவனிப்போ போய்விடுமே பிரிந்து !
5. உற்பாத பிண்டம் தேசிங்கு பாலன் ஓட்டிக் கொல்வானே !
6. சிவ்வென் றெழும்பிப் பாராசாரியும் தெய்வ லோகம் போகும் !
7. ஆகாய மட்டும் கிளம்பிப் போகு தந்தக் குதிரையும்.
8. புரவி போகும் வேகமறிந்தான் புலிக்குட்டித் தேசிங்கு.

9. தெய்வ லோகந் தன்னிலடக்கத் தேடிப போகுதென்று
10. லகானிழுத்துச் சிமிட்டா கொடுத்தான் ராஜா தேசிங்கு.
11. சிமிட்டா கொடுத்த வேகத்தி னாலே திகைத்து நின்றது.
12. இடித்த இடியில் மனதுகலங்கி இருந்துமே ஆடுதுபார்.
13. அன்னம் புசித்தே ஐந்துநாளாயிற் றறியாத பாலகனும்.
14. ஆகாயம் பூமி ஒன்றாயிருப்பதை அறிந்தான் பாலகனும்.
15. களைப்பு வந்து சூழ்ந்த வுடனே கண்டு மேதுசொல்வான் :
16. கடிவா ளத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கவிழ்ந்து படுத் தானும்.
17. குதிரைக் கயிற்றைக் கெட்டியாய்ப் பிடித்துக் குப்புறப் படுத் தானும்.

## தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதரை நினைத்தல்

1. 'அரிகரி! பரந் தாமா!' என்றே அலறி அழுதானும்.
2. 'ஆபத் பாந்தவா அனாத ரட்சகா! ஆதி மூலப்பொருளே!
3. அடியேனை வந்து ரட்சியு மையா ரங்க நாதா!'என்று,
4. அலறி யழுது கவிழ்ந்து படுத்தான் அந்தக் குதிரைமீதில்.

## ஸ்ரீரங்கநாதர் தேசிங்கு ராஜனிடத்தில் வந்தது

1. அழுத வுடனே ஸ்ரீரங்க நாதர் அருகில் வந்து நின்று,
2. கடிவாளத்தின் கயிற்றைப் பிடித்துக் கன்னத்தி லறைந்தாராம்.
3. "குழந்தையைக் கொண்டே ஆகாய மார்க்கம் கொல்ல நினைத் தாயே!
4. இன்றைய வரையி லாகாய மார்க்கம் எழும்பிப் போக வேண்டா.
5. கூட விருந்து தேசிங்கு பாலனைக் கொலுவில் கொண்டு வாராய்.
6. கொஞ்ச நாளையில் சண்டை நேரும் குழந்தைக் காணும்
7. சண்டை முனையில் மோட்ச முனைக்குச் சல்தி தாரோம்" என்றார்.

8. 'குழந்தை யுடனே மோட்ச முனக்குக் கூடத் தாரோம்' என்றார்.

9. அந்த மொழியைக் காதிலே கேட்டே அடிப ணிந்தது பார்.

10. குழந்தையை எடுத்துக் குதிரை மீதில் கூசாமல் வைத்தாராம்.

11. களைப்புத் தெளிந்து கண்ணை விழித்துக் கர்த்தனைப் பார்த் தானும்.

12. பார்த்த வுடனே ஆனந்தமாகப் பதறி யழுதானும்.

13. 'ஆபத் பாந்தவா! அனாத ரட்சகா! ஆதி மூலமே! நீ

14. அடியேனை வந்து ரட்சித் தாயே ஐயா ரங்கநாதா!'

15. என்ற வார்த்தையைக் காதில் கேட்டார் ரங்கநாதஸ்வாமி.

16. 'கண்ணே! மணியே! ரத்தினமே! என் கருவிளமே! கேளாய்:

17. குதிரை யிறங்கிச் சந்தோஷமாகக் கோட்டைக்குள் சேர்ந்திடு வாய்.

18. போய்வா ரேன்போய் வாரே னிப்போ புத்தியுள்ள மகனே!'

19. எனவே 'நல்ல தாகட்டும்,' என்றே அடிப ணிந்தானும்.

20. பணிந்த வுடனே மாயமாய் ரங்கர் பரவி யிருந்தாராம்.

## தேசிங்கு ராஜன் குதிரையை டில்லியிற் கொண்டுவந்திறக்கியது

1. போன வுடனே தேசிங்கு பாலன் புரவியை யென்னசெய் தான்?

2. மெள்ளச் சிமிட்டா கொடுத்துக் கொண்டு மெதுவாய் வாரானே.

3. கலகல கலகல கலகல என்று கனைத்து வருகுதுபார்!

4. கனைத்த சத்தத்தைக் காதிலே கேட்டார் கன்னட தேசத்தார்.

5. ஐம்பத் தாறு தேச ராஜரும் ஆகாய மேபார்த்தார்.

6. வருகிற பாலனைக் கண்ணால் கண்டு மகிழ்ச்சி யடைந்தார்கள்.

7. தேரணி ராஜனும் டில்லி துரையும் தேடி ஓடிவந்தார்.

8. ஆனந்தக் கண்ணீர் புட்ப மாரியாய் அலறி யழுதார்கள்.

9. அந்தச் சமயத்தில் வந்து நிறுத்தினான் அந்தப் பாலகனும்.

10. நிறுத்தின வுடனே புட்ப மாரி நிலையாய்ப் பொழிந்தாராம்.

11. தேவரெல்லாஞ் சந்தோஷமாகத் தேன்மாரி பொழிந்தார்கள்.

12. தேரணி ராஜன் தரணி சிங்குமே தேடி யோடிவந்தார்.
13. வந்த மகனைக் கண்ணாலே கண்டு வாரி யெடுத்தாராம்.
14. வாரி யெடுத்து மடிமீதில் வைத்து மகனை முத்தமிட்டார்.
15. ஐம்பத் தாறு தேச ராஜரும் ஆரத்தி யெடுத்தாராம்.
16. டில்லி துரையுந் தேசராஜரும் சேர வோடிவந்தார்.
17. முழங்கால் மண்டி போட்டே எவரும் முன்னே சலாஞ் செய் தார்.
18. 'ராமு ராமுரே சீதா ராமுரே ராஜா தேசிங்கு,'
19. பதில்ச லாமுங் கொடுத்தா னையா பால னெழுந்திருந்து.
20. குதிரைக்கு வேண்டிய புல்லுந் தண்ணீர் கூசாமல் வைத்தார் கள்.
21. சபையில் வந்து நிறைந்து கொண்டார் சகல தேசத்தாரும்.

## கதை முடிவு

தேசிங்கு அரசன் வீரச்செயல் டில்லி பாட்சாவுக்குப் பெருவியப்பை உண்டாக்கிற்று. பாட்சா அவனை எடுத்து அணைத்துத் தன் சிங்காதனத்தின்மேலிருத்திப் பல வெகுமதிகளையுங் கொடுத்தான்; பாட்சாவின் நீல வேணிக் குதிரை மோவுத்துக்காரனுக்குப் பரிசளிக்கப் பட்டது. தந்தையாருடன் ராஜா தேசிங்கு செஞ்சியை அடைந்தான். இராணியார் கொண்ட மகிழ்விற்கு அளவில்லை. அந்நாட்டார் யாவரும் ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

## 2. விடு கதை

1. கானகம் சென்றிரண்டு
கன்னிகைகள் கொண்டுவந்தேன் :
ஒருமகள் உழைப்பாளி ;
ஒருமகள் சப்பாணி.

2. வளர்ந்தொருவன் நீண்டொருவன்
கலையுடுத்துப் பூமுடித்துக்
கச்சணிந்து ககனமதில்
பலர்கண்கள் மேல்நோக்கக்
கரணங்கள் போடுகிறான்
கண்ணியனைக் கண்டுசொல்லே.

3. அறுப்புண்டு கட்டுண்டு அழகு செய்வாள் ;
முனையுண்டேல் அனைவருமே கௌரவிப்பர் ;
முனைகுறைந்தால் பெண்களெல்லாம் சீச்சியென்
சொன்னாலும் பேர்க்கொஞ்சம் வேலைக்காரி. [பர் ;

4. அல்லிக் குளத்திலே ஆமைவந்து மேய்கிறது
கட்டடா பிடியடா கள்ளக்கயிறு போடடா
குத்தியெடடா கூசாதின்றே தின்னடா.

5. சிமிழும் சிமிழும் சேர்ந்ததுபோல்
சிறுபெண் கொண்டை முடித்ததுபோல்

6. உள்ளே முத்துப் பதித்ததுபோல்
மேலே மஞ்சள் குளித்ததுபோல்
செம்பு நிறையக் கெம்பம்மா
தேர்ந்தே இதனைச் சொல்லம்மா.

7. ஓட்டினால் வீடுகட்டி உள்ளே புரிசுற்றி
நாட்டாருக் கென்றென்றும் நல்ல உணவாகும்.

8. காட்டினில் கட்டை வெட்டிக்
கடலோரம் ஏற்றம் போட்டு
நாட்டிற்குச் சீட்டுக் கொண்டு
நடக்கிறார் தரும ராஜா.

9. பச்சைக் கண்ணிகள் நான்குபேர் ;
பவளக் கண்ணிகள் நான்குபேர் ;
மஞ்சள் கண்ணிகள் நான்குபேர் ;
நீலக் கண்ணிகள் நான்குபேர் ;
இப்பதினாறு பேருக்கும் இரண்டே நாயகர்.

10. தோட்டத்தின் அலங்காரி ;
துரைமகளும் சிங்காரி ;
கையதனில் அடங்கிடுவள் ;
கச்சேரி ஏறிடுவள்.

*விடுகதைகளின் விடை*:—1. ஏந்திரக்கல், 2. காற்றாடி, 3. துடைப்பம், 4. தாழம்பூ, 5. வடை, 6. மாதுளம் பழம், 7. புளியம்பழம், 8. கப்பல், 9. சோக்கட்டான், 10. வெற்றிலை.

# IV. அன்னையின் அன்பு

(வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள்)

அன்னாய்! அன்னாய்! அன்போ டென்னைப்
பெற்றெடுத் தீண்டுப் பெருமகிழ் வெய்தப்
பத்துத் திங்கள் பதமுறச் சுமந்து,
சித்தந் தன்னிற் செழுமுதல் தன்னை
அல்லும் பகலும் அன்போ டேத்தி,
நல்வினை பலவும் நலம்பெறச் செய்து,
பின்னர் என்னைப் பெருமான் அருளால்
இன்னல் நோக்கா தின்போ டின்றனை;
அதன்பின் பன்னாள் அன்போ டென்னைச்
'சுதனே!' என்று சொல்லி மகிழ்ந்தனை;
வாடை அதனால் வருந்தா வண்ணம்
ஆடை பலவும் அளித்துக் காத்தனை;
பொன்னால் இயன்ற பூவணி பலவும்
என்மேற் சார்த்தி இன்பம் உற்றனை;
பள்ளியிற் சென்று பயிலுங் காலை
உள்ளந் தனில்மிக் குவகை பூத்தனை;
உடலை வருத்தும் உறுநோய் உளதேல்
கடல்போல் நீரைக் கண்ணிற் பெருக்கி,
மருத்துவம் வல்ல மக்கள்பாற் சென்று,
கருத்துடன் அவர்க்கென் கதியினை விளக்கி
அவரருள் மருந்தை அன்போ டென்கண்

கவர்பொருள் காட்டிக் களிப்பின் ஊட்டினை ;
பின்பென் பொருட்டாப் பன்முறை நீயும்
அன்போ டருஞ்சோ றருந்தி வருந்தினை ;
பற்பல கூறிப் பயனென் ? அன்னாய் !
அற்புடன் போற்றும் அருளினால் அன்றோ
கல்வியிற் சிறந்த செல்வியாம் ஔவையும்
நல்லதெய் வங்களை நாடிப் பார்த்திங்(கு)
'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,'
என்னக் கூறிநின் ஏற்றமும் காட்ட,
உன்னைக் குறிக்குமப் பொன்மொழி தன்னை
முன்னர் அமைத்து மொழிந்தனள் ? ஆதலின்,
நல்லை ; நல்லை ; நீயே நல்லை ;
இல்லை எனக்கிங் குனைப்போல் எவரும் ;
எனினும் உனக்கியான் என்செய வல்லேன் !
கனியும் அன்பாற் கருதுமன் பதைக்கு
மழையைத் தந்துபல் மாட்சியை விளைக்கும்
கருமுகில் தனக்குக் காட்டும்
பெருங்கைம் மாறெது ? பேசாய் எனக்கே.

குறிப்பு:—திங்கள்-மாதம், செழுமுதல்-கடவுள், இன்னல் - துன்பம், சுதன்-அருமை மகன், பயிலும்-கற்கும், உவகை-சந்தோஷம், மருத்துவம் - வயித்தியம், கவர் - (மனத்தை) வசீகரிக்கின்ற, அற்புடன் - அன்புடன், அருஞ்சோறு - பத்திய உணவு, மன்பதை-உயிர்கள், கருமுகில் - கருமையான மேகம், கைம்மாறு - உதவி.

## வினாக்கள்

1. இப்பாடல் யாரை நோக்கிக் கூறப்பட்டுள்ளது ?

2. தாய் குழந்தையை எத்தனை மாதங்கள் சுமந்து திரிகிறாள் ?

3. அவள் வருந்துவது எப்போது ?

4. அன்னை தன்னலங் கருதாமல் மக்கள் நலத்தையே கருதும் கண்ணியமுடையவள் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் கூறு.

5. 'தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை'—இது யார் வாக்கு ? இதை இப்பாடலோடு பொருத்திக் காட்டு.

6. தாய்மார் மக்கள் உடலை வளர்ப்பது போலவே அறிவையும் வளர்க்க என்ன செய்தல் வேண்டும் ?

7. தாய்மாரே உலகிற்கு ஊன்றுகோல் என்பதற்குத் தக்க காரணம் காட்டு.

8. தம் மக்களைச் சான்றோர்களாக்கிய அன்னையரின் சரிதம் ஒன்றைக் குறிப்பிடு.

9. அன்னையின் அன்பை எதற்கு ஒப்பிடலாம் ?

# எழுத்து வேறுபாடும் பொருள் வேறுபாடும்

## ரகர றகர பேதங்கள்

1. அரம் - ஓர் ஆயுதம்
2. அறம் - ஈகை, தருமம், கடமை
3. அரு - அறிவு, அணு, கடவுள்
4. அறு - ஒழி
5. அரை - இடை, பாதி
6. அறை - சிறு வீடு (Room)
7. உரவு - அறிவு
8. உறவு - சுற்றம்
9. எரி - தீ
10. எறி - வீசு
11. கரந்து - மறைந்து, ஒளிந்து
12. கறந்து - பால் கறந்து
13. கரை - எல்லை, முடிவு
14. கறை - குற்றம்
15. குரல் - ஓசை (Voice)
16. குறள் - சிறுமை, திருவள்ளுவர் பாடிய நூல்
17. கூரை - வீட்டின் மேற்புறம்
18. கூறை - புதுப்புடைவை
19. நிரை - ஒழுங்கு, வரிசை
20. நிறை-எடை, உறுதிப்பாடு
21. பாரை - கட்டபாரை
22. பாறை-கற்பாறை
23. புரம் - நகரம்
24. புறம் - வெளியிடம்
25. பொரி - நெற்பொரி
26. பொறி - செல்வம், தீப்பொறி
27. மரம் - விருட்சம்
28. மறம் - பாவம், வீரம்
29. மரித்தல் - இறத்தல்
30. மறித்தல் - தடுத்தல்
31. மரை - மான், தாமரை
32. மறை - வேதம்

## லகர ளகர பேதங்கள்

1. அலை - கடல், திரை
2. அளை - வெண்ணெய், தயிர்
3. கலை - சாஸ்திரம்
4. களை - அயர்வு, புல்
5. கொல் - கொல்லன், வதை, அசைச்சொல்
6. கொள் - ஒருவகைத் தானியம்

7. தோல் - சருமம் (Skin)
8. தோள் - புஜம்
9. நல்லார் - நல்லவர், பெண்டிர்
10. நள்ளார் - பகைவர்
11. புலி - ஒரு மிருகம்
12. புளி-புளியமரம், ஒருசுவை
13. புல் - அற்பம், புல்லு
14. புள் - பறவை
15. வலை - மீன் முதலியவற்றை அகப்படுத்துங் கருவி
16. வளை - கைவளை, சங்கு, நுழைவழி (Hole)
17. வலி - பாதை (Pain)
18. வளி - காற்று
19. வால் - தோகை, பரிசுத்தம்
20. வாள் - அரிவாள்
21. விலக்கு - நீக்கு
22. விளக்கு - தீபம்
23. வேல் - வேலமரம், வேலாயுதம்
24. வேள் - முருகக் கடவுள், மன்மதன்

## ணகர னகர பேதங்கள்

1. தண்மை-எளிமை, குளிர்ச்சி
2. தன்மை - குணம், இயல்பு
3. பணி - ஆபரணம், கட்டளை
4. பனி - குளிர்ச்சி
5. பண் - இசைப்பாட்டு
6. பன் - சொல்
7. புணை - தெப்பம்
8. புனை-அலங்கரி, அழகுசெய்
9. புண் - இரணம் (Wound)
10. புன் - இழிவு
11. மணம் - வாசனை, கலியாணம்
12. மனம் - நெஞ்சு

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அந்த நாள் | 60 |
| அல்லிக் | 73 |
| அறுப்புண்டு | 72 |
| அற்ற | 15 |
| ஆக்கு மறிவா | 39 |
| ஆறிடு | 27 |
| ஆற்றங்கரையின் | 22 |
| இல்லானுக்கு | 36 |
| இளமை | 48 |
| இனியது | 59 |
| இன்சொலாலன்றி | 37 |
| உள்ளங் | 34 |
| உள்ள தொழிய | 21 |
| உள்ளே | 73 |
| உற்ற | 12 |
| எட்டேகால் | 57 |
| எல்லாப்படியாலும் | 22 |
| எல்லா விடத்துங் | 49 |
| என்று | 31 |
| ஒன்றை | 25 |
| ஓட்டினால் | 73 |
| கற்பிளவோடு | 16 |
| கற்ற | 40 |
| கற்றவருக்கு | 64 |
| காட்டினில் | 73 |
| காரென்று | 55 |
| கானகம் | 72 |
| கொடியருக்கு | 61 |
| சந்தன | 18 |
| சாந்தனையும் | 19 |
| சாவாத | 46 |
| சிமிழும் | 72 |
| சொல்லாமலே | 58 |
| தக்கார்க்கே | 41 |
| தங்குறை | 35 |
| தண்டாமரை | 51 |
| தம்மையும் | 36 |
| தாந்தாழன் | 26 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக. |
|---|---|---|---|
| துப்பிட்ட | 61 | பிச்சைக்கு மூத்த | 23 |
| தேவர் | 29 | பிறர்க்குதவி | 32 |
| தோட்டத்தின் | 73 | புத்திமான் | 54 |
| நஞ்சுடைமை | 18 | பெருத்திடு | 53 |
| நல்லார் | 42 | பெற்றார் | 24 |
| நல்லோர்க்கும் | 47 | பொன்னணியும் | 43 |
| நல்லோர் | 38 | வளைந்தொருவன் | 72 |
| நற்றாமரைக் | 17 | வாரணங்கள் | 55 |
| நாற்ற | 45 | வானரம் | 52 |
| நீக்கமறுமிருவர் | 33 | வானாகி | 11 |
| நீளவே | 13 | விரக ரிருவர் | 56 |
| நேற்றுள்ளார் | 62 | விற்பனருக்கு | 63 |
| பச்சை | 73 | வெட்டிடனை | 28 |
| பச்சைமா | 11 | வைத்ததனாலாகும் | 49 |
| பண்டு | 14 | வைதிடினும் | 63 |
| பல்லுயிரும் | 11 | | |


Library
72004

THE JUPITER PRESS, G. T. MADRAS.